AVOID TO DOWNLOAD FROM userupload.net/in SPAM WEBSITE

சூரியன் பதிப்பகம்

பெரியவர்களுக்கான நீதிக்கதைகள்



MarinaBooks.com

# கடைசி பக்கம்

நிதர்ஸனா

If You Want More Free E-books

# கடைசி பக்கம்



■ நிதர்ஸனா

பதினைந்து வயது சிறுவன் அவன். ஒரு மோசமான விபத்தில் தனது இடது கையை இழந்துவிட்டான். ஆனாலும் ஊனத்தை மீறி, எதையாவது சாதிக்கவேண்டும் என்ற தாகம் அவனுக்குள் எழுந்தது.

அந்தப்பகுதியில் புகழ்பெற்ற ஒரு ஜூடோ குரு இருந்தார். அவரிடம் போய் விஷயத்தைச் சொன்னான். அவரும் புன்சிரிப்போடு அவனைப் பயிற்சியில் சேர்த்துக்கொண்டார். ''இதுதான் உன்னுடைய முதல் பாடம்'' என்று சொல்லி, ஒரு தாக்குதல் முறையைச் சொல்லிக் கொடுத்தார். மூன்று மாதங்கள் கடந்தன. அடுத்து..? குருவிடமே கேட்டான். ''இந்த ஒரே வித்தையை முழுசாகக் கற்றுக்கொள்!'' என்றார் குரு.

சில மாதங்களில் குரு இவனை ஒரு போட்டிக்கு அழைத்துச் சென்றார். முதல் இரண்டு ரவுண்டுகளில் எதிராளிகளை சுலபமாக வீழ்த்தினான் சிறுவன். அவனுக்கே பிரமிப்பாக இருந்தது. மூன்றாவது சுற்றில் புகழ்பெற்ற இன்னொரு வீரனோடு அவன் மோத நேர்ந்தது. ஆரம்பத்தில் கொஞ்சம் அடி வாங்கினாலும், அவன்தான் ஜெயித்தான்.

இறுதிப் போட்டியில் புகழ்பெற்ற ஒரு வீரனை சிறுவன் எதிர்கொள்ள நேர்ந்தது. 'மோசமாக அடி வாங்கி சிறுவன் செத்துவிடுவானோ' என்ற பயத்தில் நடுவரே சிறுவனை விலகிவிடுமாறு வற்புறுத்தினார். ஆனால் குரு, ''விடுங்கள்... அவன் ஜெயிப்பான்'' என்றார். போட்டி ஆரம்பித்தது. ஒரு கையில்லாத சிறுவன்தானே என்று அந்த புகழ்பெற்ற வீரன் அலட்சியம் காட்ட, தன் வழக்கமான தாக்குதலில் அவனையும் வீழ்த்தினான் சிறுவன்.

கோப்பையோடு திரும்பும்போது சிறுவன் கேட்டான்... ''ஒரே ஒரு தாக்குதலை மட்டும் கற்றுவைத்திருக்கும் நான் எப்படி ஜெயித்தேன்?''

குரு சிரித்தபடி சொன்னார். ''இரண்டு காரணங்கள்... ஒன்று, ஜூடோவிலேயே மிகக் கஷ்டமான ஒரு தாக்குதலை நீ நன்றாகக் கற்றிருந்தாய். இன்னொன்று, இப்படி நீ தாக்கினால் எதிராளி உன்னை மடக்க, உன் இடது கையைத்தான் வளைக்க வேண்டும்; அது உனக்கு இல்லை!''

**பலவீனங்களையே பலமாக்கிக் கொண்டால், வெற்றி நிச்சயம்!** ●

 Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books



# கடைசி பக்கம்

**● நிதர்ஸனா**

எப்போதும் இல்லாதபடி பருவமழை மோசமாகப் பொய்த்துவிட, அந்தக் காட்டில் கடுமையான வறட்சி. உணவுக்கும் தண்ணீருக்கும் விலங்குகள் பரிதவிக்க, இனம்புரியாத தொற்றுநோய் ஏதோ தாக்கி விலங்குகள் பலவும் செத்து மடிந்தன. பயந்துபோன காட்டு ராஜாவான சிங்கம், அவசரமாக விலங்குகள் கூட்டத்தைக் கூட்டியது. பிரச்னைக்கு என்ன காரணம் என்று ஆராயுமாறு கேட்டுக் கொண்டது. கூட்டத்தில் இருந்த வயதான நரி ஒன்று, ‘‘பொதுவாக யாராவது பாவம் செய்தால் பஞ்சம் தாக்கும் என்று மனிதர்கள் சொல்வார்கள். நம்மில் யாரோ செய்த பாவம்தான் எல்லோரையும் பாதிக்கிறது. அது யார் என்பதைக் கண்டுபிடித்து, அந்தப் பாவியை கடவுளுக்கு பலி கொடுத்தால் எல்லாம் சரியாகிவிடும்’’ என்றது.

‘‘சரி, எல்லோரும் வரிசையாக அவர்கள் செய்த பாவங்களைச் சொல்லுங்கள். முதலில் நான் ஆரம்பிக்கிறேன்’’ என்ற சிங்கம் சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்னது... ‘‘காட்டில் ஏதும் கிடைக்காததால், பக்கத்து கிராமத்துக்கு அடிக்கடி சென்று மாடுகளையும் ஆடுகளையும் கொன்று தின்றிருக்கிறேன். அதோடுவிடாமல் ஆடு மேய்க்கும் அப்பாவிகளையும் கொன்றேன்... எல்லாமே பெரிய பாவம்!’’

‘‘நீங்கள் காட்டுக்கே ராஜா. நீங்கள் நலமாக இருந்தால்தான் காடு பாதுகாப்பாக இருக்கும். உங்கள் பசிக்கு இரை தேடித்தானே இதையெல்லாம் செய்தீர்கள்... இதெல்லாம் பாவமில்லை!’’ என்று மற்ற விலங்குகள் பணிவாகச் சொல்லி ராஜாவை பாவத்திலிருந்து மீட்டன.

அடுத்து புலி, சிறுத்தை, காண்டாமிருகம், கரடி என ஒவ்வொன்றாக தங்கள் பாவங்களைப் பட்டியலிட, கடைசியாக மான் சொன்னது... ‘‘இங்கு புல் கிடைக்காததால், காட்டோரமாக இருக்கும் ஒரு துறவியின் வயலுக்குப் போய் நெற்கதிர்களை தின்ன முயன்றேன். ஒரே ஒரு வாய் கடித்ததும், இது பாவம் என்று உணர்ந்து திரும்பிவிட்டேன்!’’

அவ்வளவுதான்... ‘‘கடவுளுக்கு நெருக்கமான துறவியின் வயலில் நாசம் செய்தாயா... இது எவ்வளவு பெரிய பாவம். நீ செய்த பாவத்தால் கடவுள் எங்களைத் தண்டிக்கிறார்’’ என்று சொல்லி, எல்லா மிருகங்களும் மான்மீது பாய்ந்து, அதைக் குதறிக் கொன்றன.

**வலியவர்கள் செய்யும் தவறுகளுக்கு எளியவர்களே எப்போதும் தண்டிக்கப்படுகிறார்கள்!** ●



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்



கடற்கரையை ஒட்டிய அந்த மலைப் பிரதேசத்துக்கு த்ரில் சுற்றுலாவாக வந்திருந்தார்கள் அந்த இளைஞர்கள். ஆள் நடமாட்டமில்லாத அந்த பிரதேசம் திகிலும் திகைப்பும் கலந்த அனுபவத்தை அவர்களுக்குத் தந்திருந்தது. கரையோரமாகத் தென்பட்ட மலைக்குகை ஒன்று அவர்களின் ஆர்வத்தைத் தூண்ட, அதற்குள் பிரவேசித்தார்கள். இருட்டில் இருந்த அந்த குகைக்குள் சிரமப்பட்டு கொஞ்ச தூரம் போனவர்கள், மிரட்சியில் திரும்ப வந்துவிடலாம் என்று யோசித்தபோது அவர்கள் பார்வையில் பட்டது ஒரு சாக்குப்பை. அதன் அருகிலேயே நொறுங்கிப் போன எலும்புக்கூடு ஒன்று கிடந்தது. பயத்தில் ஓட எத்தனித்தாலும், அந்த பையில் ஏதோ புதையல் இருக்கலாம் என்ற ஆசை அவர்களை இழுத்து நிறுத்தியது.

ஒரு ஆளால் தூக்கமுடியாத அளவுக்கு கனத்தது அது. சிரமப்பட்டுத் தூக்கிவந்து, குகைக்கு வெளியே வைத்து பிரித்துப் பார்த்தால் உள்ளே இருந்ததெல்லாம் களி மண் உருண்டைகள். ஆத்திரமும் சிரிப்பும் ஒரே சமயத்தில் அவர்களிடமிருந்து வெளிப்பட்டது. 'என்ன செய்யலாம்' என்று யோசித்தவர்கள், தங்கள் பலத்தை அறிவதற்கு அதை பயன்படுத்தத் தீர்மானித்தார்கள். 'கடலில் யார் எவ்வளவு தூரம் எறியமுடிகிறது பார்க்கலாம்!' என்று போட்டி போட்டுக்கொண்டு, ஆளுக்கு ஒன்றாகக் கடலில் எறிந்தார்கள்.

கிட்டத்தட்ட மூட்டையே காலியான நிலையில், கடைசி உருண்டையை ஒருவன் எடுத்தபோது அது இரண்டாக உடைந்தது. உள்ளே இருந்த ஏதோ, வெயிலில் மின்னியது. உருண்டையை உடைத்து அதை வெளியே எடுத்தால்... அது பல லட்ச ரூபாய் மதிப்புள்ள பெரிய வைரக்கல்! அப்படியானால், கடலில் போய் விழுந்த மற்ற உருண்டைகளில் அவர்கள் இழந்தது எவ்வளவு வைரத்தை? தெரிந்தே தொலைத்த அந்த புதையலை நினைத்து, அவர்கள் அதன்பின் வாழ்நாள் முழுக்க தூங்கவே இல்லை.

**பாறை போல வாழ்க்கைப் பாதையில் மிரட்டும் தடைகளின் பின்னால் இருக்கும் வாய்ப்புகளை பார்க்கத் தவறினால் முன்னேற்றம் இல்லை!**

• நிர்மலா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

● நிதர்ஸனா

படிப்பறிவு இல்லாத, உலக விஷயங்கள் புரியாத கிராமத்து ஆசாமி அவன். உள்ளூர் பேக்கரி ஒன்றில் பல ஆண்டுகள் வேலை பார்த்த அனுபவத்தை வைத்து, சொந்தமாக பேக்கரி திறந்தான். கேக்குகள், பிஸ்கட்டுகள் என எல்லாவற்றிலும் புதுப்புது ரகங்களை அறிமுகம் செய்ததால் அவன் கடையில் கூட்டம் குவிந்தது.

பெரிய நகரை ஒட்டிய அவனது கிராமத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் பலவும் கால்பதித்தபோது, அந்த ஊழியர்களின் தேவைக்காக பீட்ஸா, பர்கர் என்று தயாரித்தான். உள் அலங்காரம், ஏர் கண்டிஷன் என்று கடையை நவீனப்படுத்தினான். படிக்காதவனாக இருந்தாலும், நுனிநாக்கு ஆங்கிலம் பேசும் விற்பனைப் பிரதிநிதிகளை வேலைக்கு அமர்த்தினான். வாடிக்கையாளர்கள் குவிய வேண்டும் என்பதற்காக தள்ளுபடி போன்ற சலுகைகளை அறிமுகம் செய்தான்.

வெளிநாடு சென்று பிஸினஸ் நிர்வாகம் படித்த அவனது மகன் ஒருநாள் நாடு திரும்பினான். அப்பாவின் கடையைப் பார்த்து அவன் அதிர்ந்து போனான். "என்னப்பா இது, நீ பேப்பரே படிப்பதில்லையா? அமெரிக்காவில் ஆரம்பித்து உலகம் முழுக்க பொருளாதார தேக்க நிலை இருக்கிறது. மக்கள் செலவழிக்கவே பணமின்றி தவிக்கிறார்கள். எல்லா நிறுவனங்களிலும் ஆட்களை வீட்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். உலகமே சிக்கனமாக இருப்பது எப்படி என்று கற்றுக் கொண்டு வருகிறது. நீ என்னடாவென்றால் சலுகை, தள்ளுபடி, ஆடம்பரம் என்று காசை கரியாக்குகிறாயே" என்று கோபித்துக் கொண்டான்.

வெளிநாடு போய் படித்த பையன் சொல்வது சரியாகத்தான் இருக்கும் என்று அப்பா நம்பினார். தள்ளுபடிகளை நிறுத்தினார்; கடையை அலங்கரிப்பதை நிறுத்தினார்; வேலைக்கு நியமித்திருந்த ஆட்களைக் குறைத்தார். வெரைட்டி தருவதையும் நிறுத்தினார். வாடிக்கையாளர்கள் சுவாரசியம் இழந்து கடைக்கு வருவதை நிறுத்திக் கொண்டனர். நாளடைவில் கடையையே மூட வேண்டிய கட்டாயம் வந்தது. அப்போதும்கூட, 'பொருளாதார தேக்க நிலையால் கடையை மூட வேண்டி நேர்ந்ததாக' மகன் அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தான்...



**அனுபவமும் படிப்பறிவும் ஒன்றுக்கொன்று முரண்படக்கூடாது!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

● நிதர்ஸனா

இரண்டு வருடங்களாக அர்ப்பணிப்பு உணர்வோடு தன்னுடைய வேலைகளை திறமையாகச் செய்து, அலுவலகத்தின் வளர்ச்சிக்காக உழைத்தான் அவன். ஆனாலும் அவனுக்கு சம்பள உயர்வோ, பதவி உயர்வோ... எதுவுமே கிடைக்கவில்லை. ஆதங்கத்தோடு மேனேஜரிடம் முறையிடப் போனான் அவன்.

உணர்ச்சிவேகத்தில் அவன் கொட்டித்தீர்த்த எல்லாவற்றையும் கேட்ட மேனேஜர், ''இங்க பாருப்பா... நீ ரெண்டு வருஷம் வேலை செய்ததா சொல்றே... ஆனா எனக்குத் தெரிஞ்ச வரை நீ ஒருநாள்கூட வேலை செய்யலை!'' என்றார்.

அவன் அதிர்ச்சியாகப் பார்க்க, மேனேஜர் கேட்டார்... ''ஒரு வருஷத்துல எத்தனை நாள்?''

''365 நாட்கள்; சில சமயங்கள்ல 366 நாட்கள்'' என்றான் அவன்.

''சரி... ஒரு நாளைக்கு 24 மணி நேரம்னா, அதுல உன்னோட வேலை நேரம் எட்டு மணி நேரம்தானே?''

''ஆமாம் சார்!''

''அப்படிப் பார்த்தா ஒரு நாள்ல மூணுல ஒரு பங்கு நேரம்தான் உனக்கு வேலை நேரம். வருஷத்துக்கு 366 நாட்கள்னா, அதுல மூணுல ஒரு பங்கு எவ்வளவு?''

''122 நாட்கள் வருது சார்!''

''சனி, ஞாயிறு ரெண்டு நாளும் ஆபீஸ் லீவ். வருஷத்துல 52 சனிக்கிழமையும் 52 ஞாயிற்றுக்கிழமையும் வருது. மொத்தம் 104 நாட்கள். உன்னோட வேலை நேரம்னு கணக்கு பண்ற 122 நாட்கள்ல இந்த 104 நாட்களை கழிச்சுடு. மீதி என்ன வருது?''

''18 நாட்கள் சார்!''

''வருஷத்துல உனக்கு 12 நாள் கேஷுவல் லீவ் தர்றோம் இல்லையா... அதைக் கழிச்சா மீதி என்ன வருது?''

''ஆறு நாள் வருது சார்!''

''நியூ இயர், தீபாவளி, பொங்கல், குடியரசு தினம், சுதந்திர தினம், மே தினம்... இப்படி ஆறு நாள் ஆபீஸை மூடிடறோம். இதைக் கழிச்சா மீதி என்ன வருது?''

''ஒண்ணுமே இல்லையே சார்!''

''ஆக, நீ ஒருநாள்கூட வேலையே பார்க்கலை. அப்புறம் எதுக்கு பிரமோஷன், இன்க்ரிமென்ட் கேக்கறே?'' என்று மேனேஜர் கேட்க, குழம்பிப் போய் திரும்பினான் அவன்.

**மேலே இருப்பவர்களிடம் உரிமையைக் கேட்டால், வெறுமைதான் மிஞ்சும்!** ●





Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

■ நிதர்ஸனா



மேய்ச்சலுக்குப் போன இடத்தில் ஏதோ ஒரு மரத்தின் கிளை இடது கண்ணில் குத்திவிட, அந்த நொடியிலிருந்தே தனது இடது கண்ணை இழந்துவிட்டது பரிதாபத்துக்குரிய ஒரு மான். இரண்டு கண்களும் நன்றாக இருந்தாலே சிங்கம், புலி போன்ற வேட்டை மிருகங்களிடமிருந்தும், வேட்டை வெறியோடு வரும் மனிதர்களிடமிருந்தும் தப்பித்து உயிர் வாழ்வது கடினம். ஒற்றைக்கண்ணை வைத்துக்கொண்டு வெளியில் செல்லவே அச்சமாக இருந்தது அந்த மானுக்கு!

தங்கள் கூட்டத்தில் இருந்த வயதுமுதிர்ந்த மான் ஒன்றிடம் யோசனை கேட்டது அது. ''ஆபத்து வரும் என்பதற்காக பயந்து மேய்ச்சலுக்கு செல்லாமல் இருந்தால், நிச்சயம் நீ பட்டினியில் செத்துவிடுவாய். நமது காட்டை ஒட்டிய பகுதியில் ஒரு கடற்கரை இருக்கிறது. அங்கு இருக்கும் புல்வெளியில் சென்று பசியாறிக்கொள். உனது இடதுபுறம் கடலைப் பார்க்கிறமாதிரி இருந்தால், உன் வலது கண் காட்டைக் கண்காணிக்கும். கடல் பகுதியிலிருந்து வேட்டை மிருகங்களின் ஆபத்து நெருங்காது. நீ தைரியமாக அங்கு உலா வரலாம்'' என்று யோசனை சொன்னது.

அடுத்த நாளிலிருந்து அந்த மான், கடற்கரையை ஒட்டிய அந்த புல்வெளியில் வசிக்க ஆரம்பித்தது. நன்றாக இருந்த தனது வலதுகண் பார்வையை காட்டின்மீது பதித்தபடி புல் மேய்ந்து, அவ்வப்போது புதர்களில் இளைப்பாறி வாழ்க்கையை ஓட்டியது. கடற்கரையை ஒட்டிய கிராமத்திலிருந்த சில வேடர்கள் ஒரு நாள் மானின் நடவடிக்கையை கவனித்தார்கள். அடுத்த நாளே ஒரு படகில் ஏறி, கடல் வழியாக வந்து அதை வேட்டையாடிப் பிடித்தார்கள்.

**நாம் எதிர்பார்க்காத திசைகளிலிருந்தும் தொல்லைகள் எப்போது வேண்டுமானாலும் வரக்கூடும்!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books



# குட்டிப் பக்கம்

நிதர்ஸனா

தானம் செய்வதில் இன்பம் கண்ட அந்த செல்வந்தர், மரணத்துக்குப் பிறகு சொர்க்கம் சென்றார். நரகம் எப்படி இருக்கும் என்று பார்க்கும் விபரீத ஆசை அவருக்கு வந்தது. சொர்க்கத்தின் வாசலில் இருந்த தேவதூதனிடம் அவர் இதைச் சொல்ல, அவன் அன்போடு அவரை அழைத்துச் சென்று நரகத்தைக் காட்டினான்.

சினிமாக்களில் பார்த்ததுபோன்ற மோசமான சித்திரவதைக் கூடமாக அது இல்லை. ஆங்காங்கே வட்ட வட்டமாக சாப்பாட்டு மேஜைகள். அவற்றைச் சுற்றி உட்கார்ந்திருந்தவர்கள் கைகளில் நீளமான கரண்டிகள். மேஜையின் மையத்தில் பெரிய அண்டா. அதன் அடி ஆழத்தில் அமுத பானம் இருந்தது. அதன் சுவையே நாக்கில் உமிழ்நீர் சுரக்க வைத்தது.

ஆனாலும் அங்கிருந்தவர்கள் பஞ்சத்தில் அடிபட்டவர்கள் போல எலும்பும் தோலுமாய் இருந்தார்கள். அவர்கள் சாப்பிட்டே பல நாட்கள் ஆகியிருக்கும் போல் தோன்றியது. சக்தியற்றவர்களாய் கரண்டியை அந்த அண்டாவில் விடுவதும், அள்ளிய அமுதத்தை குடிக்க முடியாமல் தடுமாறுவதுமாய் இருந்தனர். கரண்டியின் கைப்பிடி நீளமாக இருந்ததால், கைகளை மடக்கினாலும் அமுதம் வாயை எட்டவில்லை. அழுகையும் எரிச்சலும் சண்டையுமாக ஒவ்வொரு மேஜையிலும் முயற்சி தொடர்ந்தபடி இருந்தது.

செல்வந்தர் இதைப் பார்த்து வேதனைப்பட, ‘‘நீங்கள் போகவேண்டிய சொர்க்கத்தைப் பார்க்கலாம், வாருங்கள்!’’ என்று அழைத்தான் தேவதூதன். அது பக்கத்திலேயே இருந்தது. என்ன ஆச்சரியம்... சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. அதேபோன்ற மேஜைகள்; அண்டா; கரண்டி; அமுத பானத்தின் அற்புத நறுமணம். இங்கே மனிதர்கள் புஷ்டியாகவும் புன்னகை புரிந்த முகத்தோடும் காணப்பட்டார்கள். அண்டாக்களின் அருகே நெரிசலான கூட்டம் இல்லை; கூச்சலும் இல்லை.

எப்படி இது சாத்தியம்? ஒரு மேஜையை உற்று கவனித்தபோது புரிந்தது. அண்டாவின் அடி ஆழத்தில் இருக்கும் அமுதத்தை கரண்டியால் எடுக்கும் ஒருவர், அதை தனக்கு எதிரே இருப்பவருக்கு ஊட்டுகிறார். அவர் பதிலுக்கு இவருக்கு ஊட்டுகிறார். நீளமான கரண்டியால் இது மட்டுமே சாத்தியம். சுயநலம் இல்லாத அணுகுமுறைதான் இதை சொர்க்கம் ஆக்கியிருக்கிறது என்பதை உணர்ந்தார் அவர்.

**எதையும் கொடுப்பவர்களே எல்லாவற்றையும் பெறுகிறார்கள்!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்



படு பயங்கர கொள்ளைக் கும்பலின் தலைவன் அவன். தனது நம்பிக்கையான கணக்குப்பிள்ளையாக அவன் வைத்திருந்தது... வாய் பேசமுடியாத, காது கேளாத ஒரு இளைஞனை! மாட்டினாலும் காட்டிக்கொடுக்க முடியாது என்பதுதான் இவனை வேலைக்கு வைத்ததன் காரணம்!

ஆனால் தங்க நகைகள், வைரங்கள் என கொள்ளையடித்து வரும்போது, அதில் கணிசமான பகுதியை கணக்கில் காட்டாமல் அவன் சுருட்டிக்கொள்கிறான் என்று கொள்ளையனின் கையாள் ஒருவன் சந்தேகம் எழுப்பினான். அவனை கண்காணிக்க ஆள் போட்டான் தலைவன். அடுத்த சில நாட்களில் கொள்ளையடித்த பொருட்களை தனியாக அவன் ஒருமுறை கணக்கு எழுதிவைத்துக் கொண்டு, கணக்குப்பிள்ளையிடம் கொடுத்தான். கணக்கில் லட்சக்கணக்கில் வித்தியாசம் வர, சிக்கிக்கொண்டான் அவன்.

தண்டிப்பது பெரிதில்லை... இதுவரை அவன் சுருட்டிய அத்தனையும் திரும்ப வரவேண்டுமே என்று கவலைப்பட்டான் தலைவன். அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. கணக்குப்பிள்ளைக்கும் பேசவராது. அதனால் சைகை மொழி தெரிந்த அவனது வக்கீலை உதவிக்கு அழைத்தான்.

அந்த வக்கீல் சைகை மொழியில் கணக்குப்பிள்ளையிடம் விசாரித்தார். 'நான் அப்பாவி; எதையும் திருடவில்லை' என்றே ஆரம்பம் முதல் மறுத்துவந்தான் கணக்குப்பிள்ளை.

'இவன் மசிய மாட்டேன் என்கிறான்' என்று வக்கீல் சொன்னதும், துப்பாக்கியை எடுத்து கணக்குப்பிள்ளையின் நெற்றிப்பொட்டில் வைத்த தலைவன், 'இப்போது விசாரி!' என்று வக்கீலுக்கு கட்டளையிட்டான்.

மிரண்ட கணக்குப்பிள்ளை, 'இதுவரை சுமார் ஒரு கோடி ரூபாய் நகைகளை திருடியிருக்கிறேன். எல்லாவற்றையும் என் வீட்டு தோட்டத்தில் மாமரத்து அடியில் புதைத்திருக்கிறேன். நானே எடுத்துத் தருகிறேன். என்னை விட்டு விடச் சொல்லுங்கள்' என்று கெஞ்சினான். வக்கீலுக்கு இப்போது பேராசை வந்துவிட்டது.

அவன் சைகை மொழியில் சொன்னதை, ஒரு விஷமப் புன்னகையோடு வக்கீல் இப்படி மொழிபெயர்த்தார். 'முடிந்தால் என்னை சுட்டுப் பாருங்கள் என்று உங்களுக்கு சவால் விடுகிறான் தலைவா!'

**தப்பான இடங்களில் தப்பு வேலை பார்த்தால் முடிவும் தப்பாகவே அமையும்!**

● நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

● நிதர்ஸனா

மளிகைக் கடைக்கு வந்த அந்தச் சிறுவன், கடை வாசலில் இருந்த பொதுத் தொலைபேசியில் பேச முயன்றான். தொலைபேசி அவனது உயரத்துக்கு எட்டவில்லை. ஒரு அட்டைப்பெட்டியைப் போட்டு, அதில் ஏறி நின்று, நம்பரை டயல் செய்து பேசினான். கடையில் கூட்டமில்லாத நேரம் என்பதால் கடைக்காரரின் கவனத்தை அவன் எளிதாகக் கவர்ந்தான். இவ்வளவு சிரமப்பட்டு, பையன் யாரிடம் பேசுகிறான் என்று கடைக்காரர் ஒட்டுக் கேட்டார்.

''மேடம், உங்கள் பங்களா தோட்டத்தில் புல்தரையைச் செதுக்கும் வேலையை எனக்குத் தருவீர்களா? நான் பணத்துக்கு கஷ்டப்படுகிறேன்...'' என்றான் பையன்.

''அதற்கு ஏற்கனவே ஆள் இருக்கிறதே!'' என்றாள் எதிர்முனையிலிருந்த பெண்மணி.

''என்னை வேண்டாம் என்று சொல்லிவிடாதீர்கள் மேடம்! அவர் வாங்குகிற கூலியில் எனக்கு பாதியைக் கொடுத்தால் போதும்!''

''வேண்டாம்பா... இப்போது இருப்பவரே நன்றாகத்தான் வேலை பார்க்கிறார்!''

''மேடம், எனக்கு வேலை கொடுத்தால் புல்தரையைச் செதுக்குவதோடு, நடைபாதை ஓரங்களையும் அழகுபடுத்தி, உங்கள் பங்களாவின் தோற்றத்தையே மாற்றிவிடுவேன்... ஒரே ஒருமுறை வாய்ப்பு கொடுங்கள்!''

''ஸாரி! இப்போது எங்கள் வீட்டில் அதைச் செய்கிற பையனைப் பற்றி உனக்குத் தெரியாது. அவ்வளவு திறமைசாலி. அவனை மாற்ற முடியாது... போனை வைத்து விடு!''

மறுமுனையில் போன் வைக்கப்பட்டதும், சிறுவன் மாறாத புன்னகையோடு போனை வைத்தான். எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த கடைக்காரர் நெகிழ்ந்துவிட்டார். 'வாய்ப்பு கிடைக்காதபோதும் இவன் தன்னம்பிக்கையோடு சிரிக்கிறானே... இவனுக்கு உதவ வேண்டும்' என்று நினைத்த அவர், ''தம்பி, நான் உனக்கு வேலை தருகிறேன்'' என்றார்.

சிறுவன் சிரித்தபடி, ''வேண்டாம். ஏற்கனவே எனக்கு வேலை இருக்கிறது'' என்றான்.

''ஆனால் சற்று முன்னர் ஒரு வேலைக்காக போனில் கெஞ்சினாயே...''

''இல்லை சார், என்னுடைய வேலையை நான் எப்படிச் செய்கிறேன் என்று பரிசோதிக்கவே போன் செய்தேன். நான் குரல் மாற்றிப் பேசிக்கொண்டிருந்தது என் முதலாளியம்மாவிடம்தான்! அவர்கள் மாற்றமுடியாது என்று சொன்ன பழைய வேலைக்காரன் நான்தான்!''

**சுய பரிசோதனை, உங்கள் பலம், பலவீனத்தை உங்களுக்கு உணர்த்தும்!**





Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

ரயில் நிலையத்துக்கு அருகே இருந்த தண்டவாளங்களின் மீது அமர்ந்து குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. இரண்டு டிராக்குகள் அங்கே இருந்தன. ஒன்று பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் புற்கள் வளர்ந்து அடைத்திருந்த பயன்படுத்தப்படாத டிராக். இன்னொரு டிராக்கில்தான் ரயில்கள் வந்துபோய்க் கொண்டிருந்தன. எப்போதோ ஒருமுறைதான் அங்கு ரயில் வரும் என்பதால், குழந்தைகள் தங்களை மறந்து விளையாடிக் கொண்டிருந்தன. சிரிப்பும் கூச்சலுமாக நிலவிய சந்தோஷ இரைச்சலில், உண்மையிலேயே ரயில் வந்தால்கூட அவர்கள் காதில் சத்தம் விழாது!

அந்த நேரத்தில் ஒரு சரக்கு ரயில் நிலையத்துக்கு வந்துகொண்டிருந்தது. வழக்கமாக இந்த நேரத்தில் ரயில்கள் ஏதும் வருவதில்லை என்பதால் குழந்தைகள் தங்களை மறந்து விளையாடிக் கொண்டிருந்தன. சிக்னல் மாற்றித்தரும் உயரமான கோபுரத்தில் இருந்து இதை கவனித்த ஊழியர், வரும் ரயிலை எந்த டிராக்கில் செலுத்துமாறு உத்தரவிடுவது என்று குழம்பிவிட்டார். எப்போதும் பயன்பாட்டில் இருக்கும் டிராக்கில் ஏராளமான குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்க, பயன்படுத்தப்படாத பழைய டிராக்கில் ஒரே ஒரு குழந்தை மட்டும் தனியாக அமர்ந்து சறுக்கி விளையாடிக் கொண்டிருந்தது.

ரயிலின் ஹாரன் ஓசை அவர்களில் யார் காதிலும் விழவில்லை. இறங்கிப் போய் எச்சரிக்கும் அருகாமையிலும் அவர் இல்லை. ஒரு குழந்தை இறந்தால் பரவாயில்லை என்று பயன்பாட்டில் இல்லாத டிராக்கில் ரயிலை செலுத்துவதா? அப்படிச் செய்தால், 'இதில் ரயிலே வராது' என்ற நம்பிக்கையில் விளையாடிய அந்தக் குழந்தையின் நம்பிக்கையை அல்லவா சிதைக்கிறோம்! ஆபத்தை அறியாமல் விளையாடும் அந்தக் குழந்தையின் நண்பர்களுக்காக, அது உயிரைத் தியாகம் செய்ய வேண்டுமா?

கேள்விகளில் குழம்பிய அவர், எப்போதும் ரயில்கள் வரும் டிராக்கிலேயே சிக்னலை திருப்பிவிட்டார். ஹாரன் ஓசை அருகில் கேட்டதும் குழந்தைகள் லாவகமாக நகர்ந்து தப்பின. காரணம், அதுதான் ரயில்கள் வரும் பாதை என்பது அவர்களுக்குத் தெரியும். பயன்படுத்தாத டிராக்கில் ரயில் போயிருந்தால், அந்த ஒற்றைக் குழந்தை செத்துப் போயிருக்கும். காரணம், அது ரயில்கள் வராத பாதை என்பதால் அது விலகி ஓடியிருக்காது!

**அசாதாரணமான சூழல் தவிர, மற்ற நேரங்களில் இயல்பை மாற்றாதீர்கள்!**

**● நிதர்ஸனா**





Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books



# கடைசி பக்கம்

**◆ நிதர்ஸனா ◆**

பொட்டல்காடாக இருக்கும் பாலை வனத்துக்கு நடுவே இருக்கும் ஒரு அரசு கிடங்கில், அரசின் பல்வேறு துறைகளில் வீணாகும் பழைய பொருட்கள் கொட்டி வைக்கப்பட்டிருந்தன. சுக்குநூறான வாகனங்கள், பழைய புத்தகங்கள், இரும்பு உதிரிபாகங்கள் என வீணானவை என்றாலும், அவை விலை மதிப்புமிக்கவைதான்!

இந்த கிடங்கிலிருந்து பொருட்கள் திருடுபோகாமல் காப்பாற்ற வேண்டும் என்று ஒரு அதிகாரிக்கு திடீரென தோன்றியது. அதிகாரிகள் கலந்து பேசி ஒரு வாட்ச்மேனை நியமிக்க முடிவெடுத்தனர்.

இன்டர்வியூ நடத்தப்பட்டு வாட்ச்மேனும் வேலைக்குச் சேர்ந்தார். 'சரி, அவர் யாருடைய கட்டளைகளுக்குப் பணிந்து வேலை பார்ப்பார்?' என்ற கேள்வி எழ, உடனடியாக 'திட்டமிடல் துறை' புதிதாக உருவாக்கப்பட்டது. வாட்ச்மேனுக்கு உத்தரவுகள் போட ஒருவர், பணி நேரங்களை ரெக்கார்ட் செய்து, கடிதப் போக்குவரத்துகளை கவனித்துக்கொள்ள ஒருவர் என இரண்டு பேர் நியமிக்கப்பட்டனர்.

'சரி, இந்த மூன்று பேரும் ஒழுங்காக வேலை பார்த்து, திருட்டு நடக்காமல் தடுக்கிறார்களா என்பதை கண்காணிக்கப்போவது யார்?' என்ற கேள்வி அடுத்து எழுந்தது. உடனடியாக உருவானது தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு. கண்காணித்து ஆலோசனை சொல்ல ஒருவர், ரெக்கார்ட் பணிகளை கவனித்துக்கொள்ள ஒருவர் என இரண்டு பேர் நியமிக்கப்பட்டனர்.

இந்த ஐந்து பேருக்கும் சம்பளம் கொடுத்து, இவர்களின் லீவ் அப்ளிகேஷன் போன்ற சலுகைகள், உரிமைகளைப் பெற்றுத்தர நிர்வாகப் பிரிவு ஒன்று உருவானது. ஆபீஸில் இருக்க ஒருவர், வங்கிக்கும் தலைமை அலுவலகத்துக்கும் அடிக்கடி போய் வர ஒருவர், இந்த இரண்டு பேருக்கும் வேலை செய்ய இன்னொருவர், இந்த மூன்று பேரையும் வேலை வாங்க ஒரு அதிகாரி என நான்கு பேர் பணியில் சேர்ந்தார்கள்.

ஒரு வருஷம் போனது... பணியை தணிக்கை செய்ய வந்த தலைமையிடத்து அதிகாரி, 'செலவு அதிகம் ஆகிறது; குறைந்தபட்சமாக செலவில் 60 ஆயிரமாவது குறைக்க வேண்டும்' என்று பரிந்துரை செய்தார். அதிகாரிகள் எல்லோரும் மீட்டிங் போட்டு ஆலோசித்தார்கள். தங்கள் வேலைதான் அத்தியாவசியமானது என்று எல்லோருமே வாதாட, சிக்கன நடவடிக்கையாக, மீட்டிங்குக்கு அழைக்கப்படாத ஒரே ஆளான வாட்ச்மேனை மட்டும் வேலையிலிருந்து தூக்கிவிட்டார்கள்.

*எதற்காக ஒரு சிஸ்டம் இயங்குகிறது என்பது புரியாவிட்டால் விபரீத முடிவுகளே விளையும்!*


Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

**நிதர்ஸனா**

குட்டி ஒட்டகம் தனது அம்மாவிடம் சொன்னது... ''அம்மா, மற்ற விலங்குகளைப் பார்க்கும்போது நமக்கு மட்டும் சில வித்தியாசங்கள் இருக்கின்றன. இதைவைத்து மற்ற விலங்குகளின் குட்டிகள் என்னை கிண்டல் செய்கின்றன... எனக்கு இந்த உருவ அமைப்பு குறித்து நிறைய சந்தேகங்கள் இருக்கின்றன!''

''என்ன சந்தேகம்... கேள் மகளே!'' என்றது அம்மா ஒட்டகம்.

''ஏனம்மா நமக்கு மட்டும் முதுகின் உச்சியில் ஏதோ லக்கேஜ் மாதிரி இவ்வளவு பெரிய திமில் இருக்கிறது..?''

''கண்ணுக்கெட்டும் தூரம் வரை தண்ணீர் கிடைக்காத, வறண்ட மணல் பாலைவனத்தில் வாழும் விலங்குகளாக நம்மை இறைவன் படைத்திருக்கிறார் மகளே! பல நாட்கள் தண்ணீர் இல்லாமல் ஜீவிக்கக்கூடிய அற்புத வரத்தையும் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிறார். என்றாவது ஒருநாள் தண்ணீர் கிடைத்தால், அதைக் குடித்து சேமித்து வைத்துக்கொள்ளத்தான் இந்த திமில்!''

''சரி, நமக்குக் கால்கள் நீளமாகவும், பாதங்கள் வட்டமாகவும் ஏன் இருக்கிறது..?''

''அப்படி இருப்பதால்தான், கால்கள் புதையும் மணலில் நம்மால் சுலபமாக நடக்க முடிகிறது. மற்றவர்களின் கால்கள் அப்படி இல்லாததால் அவர்கள் மணலில் நடக்க சிரமப்படுகின்றனர். இதுவும் இறைவன் நமக்கு அளித்த வரம்தான்!''

''நமக்கு மட்டும் ஏன் இமையில் முடிகள் நீளமாக இருக்கின்றன? சில சமயங்களில் இது என் பார்வையையே மறைத்துவிடுகிறதே?''

''அதுவும் தேவைக்காகத்தான் மகளே! பாலவனத்தில் அடிக்கடி புழுதிக்காற்று அடிக்கும். காற்றில் எழும்பும் மணல்துகள்கள் கண்ணுக்குள் போய் விடாமல் தடுக்கத்தான் இறைவன் இப்படி படைத்திருக்கிறார்!''

''எல்லாம் சரி அம்மா... கடைசியாக ஒரே ஒரு கேள்வி'' என்றது குட்டி.

'கேள்' என்பது போல பார்த்தது அம்மா ஒட்டகம்.

''இப்படி பாலைவனத்தில் வாழ்வதற்காக ஸ்பெஷலாக படைக்கப்பட்ட நாம், இந்த மிருகக்காட்சி சாலையின் கூண்டுக்குள் ஏன் அடைந்துகிடக்கிறோம்?''

அம்மா ஒட்டகம் அமைதியாகச் சொன்னது... ''விதி என்பதைத் தவிர என்னிடம் வேறு பதில் இல்லை மகளே!''

*திறமை, அனுபவம், தனித்தன்மை, புத்திசாலித்தனம்... எல்லாமே சரியான இடத்தில் இருப்பவர்களுக்குத்தான் பயன்படும். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?*





Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

திருமண தகவல் மையத்துக்கு வந்த அந்த இளைஞன் பதற்றமாக இருந்தான். ''எங்க அப்பாவுக்கு உடம்புக்கு முடியாம இருக்கு. அவசரமா எனக்கு கல்யாணம் பண்ணிவைக்க ஆசைப்படறார். பொண்ணு உறுதியாகிட்டா, அடுத்த முகூர்த்தத்துலயேகூட கல்யாணத்தை வச்சுக்கலாம். என்னோட டேஸ்ட்டை சொல்லிடறேன்... அதுக்குப் பொருத்தமா இருக்கற மாதிரி ஒரு பெண்ணை செலக்ட் பண்ணிக் குடுங்க!'' என்றான் அவன்.

''சரி, சொல்லுங்க... என் கிட்ட ஆயிரக்கணக்கான பெண்களைப் பற்றிய விபரங்கள் இருக்கு!'' என்றார் திருமண தகவல் மையப் பொறுப்பாளர்.

''அழகா இருக்கணும்; மிருதுவான குரல்ல பேசணும்; சினிமா, விளையாட்டு, அரசியல்னு எல்லாத்தைப் பத்தியும் நல்லா தெரிஞ்சு வச்சிக்கிட்டு என்னோட உரையாடணும். நான் சோகமா இருக்கறப்ப, நகைச்சுவையா பேசி என்னை சிரிக்க வைக்கணும். எனக்கு பேச்சுத் துணைக்கு ஆள் தேவைப்படும்போது இனிமையான கதைகள் சொல்லி, என்னை உற்சாகப்படுத்தணும். நான் ஓய்வெடுக்கும்போது அவளும் அமைதியாகிடணும். மொத்தத்துல நான் வெளியில் எங்கேயும் போகாம வீட்டில் இருக்கும்போது எனக்கு அவள் நல்ல பொழுதுபோக்கா இருக்கணும்'' என்று பட்டியலிட்டான் இளைஞன்.



எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்ட திருமண மையப் பொறுப்பாளர், இப்படி பதில் சொன்னார்... ''உங்களுக்கு தேவைப்படறது மனைவி இல்லை; டெலிவிஷன் பெட்டி. நீங்க கேக்கற எல்லாத்தையும் அது மட்டும்தான் செய்யும். பக்கத்துலயே ஒரு ஷோரூம் இருக்கு... போய் வாங்கிக்கோங்க!''

உயிரும் உடலுமானவள் இல்வாழ்க்கைத்துணை என்பது இப்படிப்பட்ட நிறைய பேருக்குப் புரிவதில்லை. 'செவிட்டு கணவனும் குருட்டு மனைவியும் மட்டுமே ஆதர்ச தம்பதிகளாக வாழமுடியும்' என்று ஒரு பழமொழி உண்டு. அப்படி இருந்தால்தான் கணவனின் தவறுகளை மனைவியால் பார்க்கமுடியாது; மனைவியின் புலம்பல்களில் கணவன் எரிச்சல் ஆகாமல் இருக்க முடியும். திருமணம் முடிந்த முதல் சில மாதங்களில் கணவன்மார்கள் செவிடர்களாகவும், மனைவியர்கள் குருடர்களாகவும்தான் இருக்கிறார்கள். அப்புறம் புலன்கள் உயிர்பெற, உறவு விரிசல் காண்கிறது!

**கண்களையும் காதுகளையும்விட உறவை பெரிதாக மதியுங்கள்!**

**•நிதர்ஸனா**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்



சைபீரியாவின் குளிர் தாங்காமல் வட துருவத்திலிருந்து கிளம்பி, வெயிலான பிரதேசம் தேடி பறந்துகொண்டிருந்தது அந்தப் பறவை. வருஷா வருஷம் இப்படி இடம்பெயர்வது அதற்கு சகஜமான விஷயம் தான்...

இந்த வருஷம் கொஞ்சம் சோம்பல்பட்டு நாட்களைக் கடத்தியதால், தீவிரமான பனிப்பொழிவுக்கு நடுவே பறக்கவேண்டிய சூழ்நிலை. சிறகுகளில் பனித்துகள்கள் ஒட்டிக்கொள்ள, நடுக்கும் குளிரில் பறக்கவே முடியவில்லை அதனால்!

இன்னும் எவ்வளவு தூரம் இப்படி வேதனையோடு கடக்க வேண்டி இருக்குமோ என்று மனம் வெதும்பியபடி சிறகுகளை அசைத்துப் பறந்த அது, ஒரு கட்டத்தில் முடியாமல் அப்படியே தரையில் விழுந்துவிட்டது. அது விழுந்தது ஒரு பரந்த புல்வெளியில். உடல் முழுக்க ஒட்டியிருந்த பனி அப்படியே அதை மூடிக்கொள்ள, உறைந்துபோய் அப்படியே கிடந்தது அது. 'அவ்வளவுதான்... நாம் செத்துப்போய்விடுவோம்!' என்று கண்களை மூடிக்கொண்டே நினைத்தது.

புல்வெளியில் மேய்ந்துகொண்டிருந்த மாடு ஒன்று, மிகச்சரியாக இந்த பறவையின் மீது சாணம் போட்டது. சூடாக இருந்த அந்த சாணத்தின் கதகதப்பில் பனியெல்லாம் கரைய, கொஞ்சம் கொஞ்சமாக உடலில் அசைவுகள் இயல்பானது. நீண்ட நாட்களுக்குப் பிறகு இப்படி வெப்பத்தை அனுபவித்த குஷியில் அது சத்தமாகப் பாட ஆரம்பித்தது.

அந்தப் புல்வெளியில் பசியோடு இரை தேடி அலைந்துகொண்டிருந்த ஒரு முரட்டுப்பூனையை இந்தப் பாடல் ஈர்த்தது. சாணக்குவியலுக்குள் இருந்துதான் சத்தம் வருகிறது என்பதை உணர்ந்த பூனை, அதற்குள் இருந்த பறவையைக் கவ்விப்பிடித்து வெளியே எடுத்தது. சுத்தமாய் அதைக் கழுவி, தனக்கு இரையாக்கிக் கொண்டது.

**நம் மீது அசிங்கத்தை வாரி இறைப்பவர்கள் எல்லோருமே நம் எதிரிகள் இல்லை;**

**அவலமான இடத்தில் சிக்கியிருக்கும்போது நம்மை மீட்பவர்கள் எல்லோருமே நம் நண்பர்கள் இல்லை;**

**அசிங்கமான ஒரு சூழலில் சிக்கியிருக்கும்போது, வாயை மூடிக்கொண்டிருப்பதே புத்திசாலித்தனம்!**

**•நிதர்ஸனா**


Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

நிதர்ஸனா

வளம் கொழிக்கும் நிலங்களுக்கு சொந்தக்காரனான அவனுக்குப் பிரச்னையே மழைதான்! திடீரென இடியும் மின்னலும் காற்றும் கலந்துகட்டி அடிக்க, மழை ஊற்றும். இதற்கு பயந்துகொண்டே வேலைக்கு ஆட்கள் வர மறுக்க, பண்ணை வீட்டில் தனியாக இருந்தபடி விவசாயம் பார்க்க வேண்டிய துர்பாக்கிய நிலை!

ஒருநாள் ஒரு நடுத்தர வயது ஆசாமி வேலைக்கு வந்தான். ''உனக்கு எல்லா வேலையும் தெரியுமா?'' என்று அவனிடம் கேட்டான். வந்த ஆசாமி, ''எப்பேர்ப்பட்ட மழையிலும் நான் நிம்மதியா தூங்குவேன்!'' என்று பதில் சொன்னான்.

புதிரான இந்த பதில் அவனுக்குக் குழப்பத்தைத் தந்தாலும், வேறுவழியின்றி அவனை சேர்த்துக் கொண்டான். அவனும் பம்பரமாகச் சுழன்று வேலை பார்த்தான். பண்ணை முதலாளிக்கு பரம திருப்தி.



நாட்கள் அமைதியாக நகர்ந்தன. திடீரென ஒருநாள் இடியும் காற்றுமாக மழை ஆரம்பிக்க, பண்ணை முதலாளிக்கு பகீர் என்றது. 'புது ஆளை நம்பி சும்மா இருந்து விட்டோமே... அறுவடை செய்த நெல் திறந்த வெளியில் கிடக்கிறது... வைக்கோல் போர் ஒரு மூலையில் கிடக்கிறது. மாடுகள் தொழுவத்தில் பத்திரமாக இருக்கின்றனவா? கோழிகளை அடைத்து வைத்தானா...' என புலம்பிக்கொண்டே, கையில் லாந்தரோடு வேலையாளின் குடிசைக்கு ஓடினான். அவனோ சுகமாக தூங்கிக்கொண்டிருந்தான். கோபமாக அவனை எழுப்பியதும், ''நான்தான் சொன்னேனே முதலாளி... எவ்வளவு காத்து, மழையிலயும் நான் நிம்மதியா தூங்குவேன்'' என்றபடி திரும்பவும் தூங்கிவிட்டான்.

முதலாளிக்கு அடக்கமுடியாத கோபம். முதலில் பண்ணையைக் காப்பாற்றுவோம்; அப்புறம் இவனைப் பார்த்துக்கொள்வோம் என்று வெளியில் ஓடிவந்தான்.

அவனுக்கு ஆச்சரியம் தாளவில்லை... நெல் மூட்டைகள் அழகாக அடுக்கி, தண்ணீர் புகாதவாறு தார்ப்பாய் போட்டு கட்டப்பட்டிருந்தன. வைக்கோலும் பத்திரமாக இருந்தது. மாடுகள் தொழுவத்தில் இருக்க, அதன் கதவு பாதுகாப்பாக மூடப்பட்டிருந்தது. கோழிகள் சுகமாக கூடைக்குள்ளிருந்தபடி கத்துவது கேட்டது. 'எந்த மழையிலும் நிம்மதியாகத் தூங்குவேன்' என்று அந்த ஆசாமி சொன்னதன் அர்த்தம் இப்போது அவனுக்குப் புரிந்தது.

**எதையும் எதிர்கொள்ளத் தயாராக இருந்தால், எதைப் பற்றியும் கவலைப்படத்தேவையில்லை!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

● நிதர்ஸனா

பால்கனியின் ஒரு ஓரத்தில் ஈஸி சேரில் அமர்ந்தபடி வெளியில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த அந்த முதியவர், பக்கத்தில் அமர்ந்து நியூஸ் பேப்பரில் மூழ்கியிருந்த மகனிடம் திரும்பி, ''ஏம்பா, பால்காரன் வந்துட்டானா?'' என்றார்.

மகன் எரிச்சலாகி பேப்பரிலிருந்து தலையை வெளியில் எடுத்து, ''அதான் அப்பவே உன் மருமக காபி குடுத்தாளே... மறந்துட்டியா?'' என்று சொல்லிவிட்டு திரும்பவும் பேப்பர் படிக்க ஆரம்பித்தார்.



ஐந்து நிமிடங்கள் அமைதியாக ஓடின. அது ஞாயிற்றுக்கிழமையின் அதிகாலை என்பதால் ரோட்டில் வேடிக்கை பார்க்கவும் சுவாரசியமாக ஏதும் இல்லை. பெரியவர் மீண்டும் உள்பக்கம் திரும்பி, ''பால்காரன் வந்துட்டானா?'' என்று மகனிடம் கேட்டார்.

மகன் கோபத்துடன் நியூஸ்பேப்பரை வீசி எறிந்தார். ''இந்த ஞாபகமறதிக் கிழவனோட மாரடிக்கறதைவிட இன்னைக்கும் ஆபீஸ் போய் தொலைஞ்சிருக்கலாம். காலையிலயிருந்து நாலு தடவை இதே கேள்வியைக் கேட்டா என்ன அர்த்தம்... உன்னையெல்லாம் எங்கயாவது தலைமுழுகி இருக்கணும். வீட்டுக்காவலுக்கு ஆள் இல்லையேன்னு வச்சிருக்க வேண்டியிருக்கு!'' என்றார் சத்தமாக.

முதியவரின் கண்களிலிருந்து கண்ணீர் முத்துகள் உருண்டன. அமைதியாக எழுந்து அலமாரியை நோக்கிப் போனார். பழுப்பேறிப் போயிருந்த ஒரு டைரியை எடுத்தார். அதில் ஒரு பக்கத்தைப் பிரித்து எடுத்துவந்து மகனிடம் கொடுத்து, ''படித்துப் பார்!'' என்றார்.

இப்போது திட்டும் மகனைப் பற்றி, பெரியவர் எப்போதோ எழுதியிருந்த டைரி அது. 'அம்மா, அப்பா என்று ஒற்றை வார்த்தைகளை பேசிக் கொண்டிருந்த மகன், இன்று வார்த்தைகளை கோர்க்கக் கற்றுக்கொண்டான். நாயைக் காட்டி, தன் மழலைக்குரலில், அது என்ன? என்று கேட்டான்... நாய் என்றேன். திரும்பவும், அது என்ன? என்று கேட்டான். நாய் என்றேன். இருபது முறையாவது அவன் கேட்டிருப்பான். எனக்கு எரிச்சலே வரவில்லை. ஒவ்வொருமுறை அவனுக்கு பதில் சொல்லும்போதும் என் சந்தோஷம் இரண்டு மடங்கானது...'

**கேள்வி கேட்டு வளரும் நாம், வளர்ந்த பிறகு கேள்விகளை வெறுக்கிறோம்!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்



**பு**திதாக திருமணம் செய்து கொண்ட அந்த இளஞ்ஜோடிகள், தேனிலவுக்காக ஒரு அழகிய மலைப்பிரதேசத்துக்குப் பயணம் போனார்கள். நகருக்கு வெளியே இருக்கும் ஒரு ரிசார்ட்ஸில் இவர்களுக்கு அறை கிடைத்தது. இவர்கள் பயணித்த பஸ்ஸில் கூட்டம் குறைவாகவே இருந்தது. நட்போடு இவர்களிடம் பேசிய கண்டக்டர், நிறுத்தம் இல்லாவிட்டாலும் இவர்கள் வசதிக்காக, ரிசார்ட்ஸ் வாசலிலேயே இறக்கிவிடுவதாகச் சொன்னார்.

அப்படியே இறக்கியும் விட்டார். இவர்கள் இறங்கியதும் பஸ் கிளம்பி கொஞ்ச தூரம்தான் போயிருக்கும். மலை உச்சியிலிருந்து ஒரு பெரிய பாறை திடீரென உருண்டு பஸ் மீது விழுந்தது. கிட்டத்தட்ட நசுங்கி, சிதைந்துவிட்ட பஸ்ஸில் இருந்து ஏராளமான ஓலக்குரல்கள் கேட்டன. இந்த ஜோடிகளோடு, அக்கம் பக்கம் இருந்த எல்லோருமே ஓடிப்போய் மீட்புப்பணியில் இறங்கினார்கள். அடிபட்டு கதறியவர்களின் நிலைமையைப் பார்த்தால், அவர்களில் யாராவது உயிர் பிழைப்பார்களா என்பதே சந்தேகமாக இருந்தது.

இளஞ்ஜோடிகள் தேம்பித் தேம்பி அழுதனர். பஸ்ஸில் இருந்த யாரும் அவர்களின் உறவினர்கள் இல்லை என்றாலும், தங்களோடு சற்றுமுன்னர் வரை உற்சாகமாக உரையாடிக்கொண்டு வந்தவர்கள், இப்படி ஒரு முடிவுக்கு ஆளாகிவிட்டனரே என்ற சோகம் அவர்களைத் தாக்கியது.

‘‘நாம் ஏன்தான் பஸ்ஸிலிருந்து இறங்கினோமோ..!’’ என்று அழுகைக்கு இடையே சொன்னாள் மனைவி. அந்த இளம் கணவனுக்கு கோபம் வந்தது. ‘‘என்ன பேசுகிறாய் நீ... நாம் இப்போதுதான் வாழ்க்கையை ஆரம்பித்திருக்கிறோம். இவர்களைப் போல நாமும் பஸ்ஸில் இருந்து, நசுங்கி செத்துப் போயிருக்க வேண்டுமா?’’ என்று கத்தினான்.

‘‘நான் அப்படிச் சொல்லவில்லை’’ என்று இழுத்த மனைவி சொன்னாள்... ‘‘பஸ் இங்கு நின்று நம்மை இறக்காமல் நேரே போயிருந்தால், பஸ் இந்த இடத்தைக் கடந்த பிறகுதான் பாறை விழுந்திருக்கும். இப்படி ஒரு விபத்தே நேர்ந்திருக்காது!’’

**அடுத்தவர்களுக்கு உதவும் மனம் படைத்தவர்கள், எப்போதும் மாறுபட்ட கோணத்தில் சிந்திப்பார்கள்!**

**● நீதர்ஸனா**


Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

● நிதர்ஸனா

தொடர்ச்சியாக பல அரிய கண்டு பிடிப்புகளை நிகழ்த்தி சாதனை படைத்த விஞ்ஞானி அவர். டி.வி. நிகழ்ச்சி ஒன்றுக்காக அவரை பேட்டி எடுத்தார் ஒரு நிருபர். ''சராசரி மனிதர்களைப் போல இல்லாமல், இப்படி கிரியேட்டிவ்வாக நிறைய கண்டுபிடிப்புகளை நீங்கள் நிகழ்த்தியதற்கு தூண்டுகோலாக இருந்த சம்பவம் எது?'' என்று கேட்டார் நிருபர்.

''நான்கு வயதில் என் அம்மா கற்றுத் தந்த அனுபவப் பாடம்தான்'' என்ற விஞ்ஞானி, அந்த சம்பவத்தை விவரித்தார்.

அம்மா சமையல் செய்துகொண்டிருக்க, நான்கு வயது குழந்தையாக அப்போது இருந்த விஞ்ஞானிக்கு பசி. பாலாவது குடிக்கலாமே என்று ஃபிரிட்ஜைத் திறந்து பால் பாத்திரத்தை குழந்தை எடுக்க, அது கைதவறி கீழே விழுந்து பால் கொட்டிவிட்டது.

சத்தம் கேட்டு அம்மா ஓடி வந்து பார்த்தாள். நடுங்கியபடி நின்றிருந்தது குழந்தை. அம்மா திட்டவில்லை; அடிக்கவில்லை. ''ஹேய், குளம்மாதிரி இவ்வளவு பால் தரையில கொட்டி கிடக்குது. இதுமாதிரி நானே இதுவரைக்கும் பார்த்ததில்லை. இதுல விளையாடினா ஜாலியா இருக்கும். அஞ்சு நிமிஷம் பால்ல இஷ்டம் போல விளையாடு!'' என்று குழந்தையைக் கொஞ்சிவிட்டு, திரும்பவும் சமையல் செய்யப் போய்விட்டாள்.



குழந்தை விளையாடியது. ஐந்து நிமிடம் கழித்து வந்தவள், குழந்தையின் கையில் ஒரு ஸ்பாஞ்சைக் கொடுத்தாள். ''டார்லிங், நீ கொட்டினதை நீயேதான் துடைக்கணும். துடைச்சிட்டு வீட்டை பழையபடி சுத்தமாக்கணும். அப்பதான் துடைக்கறது எப்படிங்கறதையும் நீ கத்துக்க முடியும்'' என்றாள். குழந்தை துடைத்தது.

பிறகு குழந்தையை அழைத்துக் கொண்டு தோட்டத்துக்குப் போனவள், ''இரண்டு பிஞ்சுக் கைகளால ஒரு பெரிய பால் பாத்திரத்தைத் தூக்கறது எப்படின்னு நீ செய்த பரிசோதனை தோல்வியில முடிஞ்சது. இப்ப அதே பாத்திரத்துல அதே அளவு தண்ணீரை ஊற்றி, தூக்கிப் பாரு!'' என்றாள்.

நிருபரிடம் விஞ்ஞானி சொன்னார்... ''அந்தப் பாத்திரத்தின் குறுகலான கழுத்துப் பகுதியைப் பிடித்தால் சுலபமாகத் தூக்கமுடியும் என்று அம்மா கற்றுத் தந்தாள். அன்றிலிருந்து தப்பாகிவிடுமோ என்று எதையும் செய்ய நான் தயங்கியதில்லை. தவறுகள்தான் நாம் கற்றுக்கொள்ள உதவும் சந்தர்ப்பங்கள்!''

**தவறு செய்யுங்கள்; அதிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள். செய்த தவறையே திரும்பவும் செய்யாதீர்கள்!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books



# கடைசி பக்கம்

காட்டில் ஏலம் விடப்படும் பட்டுப் போன பழைய மரங்களை வெட்டியெடுக்கும் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தான் அந்த இளைஞன். வீட்டை மறந்து காட்டுக்குள் நீண்டநாட்கள் இருக்கவேண்டிய வேலை என்பதால், அந்தக் குழுவில் பலரும் வயதானவர்களாக இருந்தார்கள். இளைஞனுக்கு அனுபவமில்லை என்றாலும், அவர்களைப் பார்க்க ஏளனமாக இருந்தது. 'இவர்களைவிட தினமும் இரண்டு மடங்கு அதிக மரங்களை வெட்டி, இரண்டு மடங்காக நான் சம்பாதிப்பேன்' என்று மனசுக்குள் உறுதி எடுத்துக்கொண்டான்.

முதல் நாள் இது சாத்தியமானது. மற்ற எல்லோரும் இரண்டு மணி நேரத்துக்கு ஒரு தடவை வேலைக்கு பிரேக் விட்டு, பத்து நிமிடங்களாவது மர நிழலில் உட்கார்ந்தபடி தேநீர் குடித்து கதை பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கூப்பிட்டாலும், இவன் சாப்பிடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் ஓய்வெடுப்பது இல்லை. இதனால்தான் தன்னால் இரண்டு மடங்கு மரங்களை வெட்ட முடிந்தது என்று நினைத்தான்.

அடுத்த நாள் எவ்வளவு முயற்சித்தும் அவனால் அதிக மரங்களை வெட்ட முடியவில்லை. மூன்றாம் நாள் நிலைமை இன்னும் மோசமானது. அந்தக் கிழவர்கள் ஓய்வெடுத்தது போக மற்ற நேரங்களில் வெட்டி முடிக்கும் அளவுக்குக்கூட அவனால் முடியவில்லை.

மதியவாக்கில் அவனை அணுகினார் ஒரு முதியவர். 'எங்களோடு வந்து ஒரு டீ குடி! அப்புறம் என்ன ஆகிறது என்று பார்' என அவனை வற்புறுத்தி இழுத்துப் போனார். அங்கு போனபிறகுதான் அவனுக்கு ஒரு உண்மை புரிந்தது. அவர்கள் சும்மா டீ குடித்து கதையளந்து கொண்டிருக்கவில்லை. பேசியபடியே அவர்களது கோடாரிகளையும் தீட்டிக் கொண்டிருந்தார்கள். 'வெறுமனே உடல்பலத்தை மட்டும் நம்பாதே... அதை புத்திசாலித்தனமாகவும் பயன்படுத்து' என்று அவனுக்கு அட்வைஸ் செய்தார் அந்த முதியவர்.

***ஓய்வெடுக்க நேரமில்லை என்று எப்போதும் உழைப்பதைவிட, இடையில் ஓய்வெடுத்து வேலைக்கான திட்டங்களை கூர்மைப்படுத்திக் கொள்வதே புத்திசாலித்தனம்!***

● நீதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

ஒரு கிராமத்தில் நடந்த கட்டுமானப் பணியை மேற்பார்வையிடும் வேலைக்குவந்த அந்த இளைஞன், அங்கு அழகான ஏழைப் பெண் ஒருத்தியைப் பார்த்து, அவளது பண்பில் மயங்கி, அவளையே மணந்துகொண்டான். நாளடைவில் அவனே சொந்த நிறுவனம் தொடங்கி, பல பணிகளைச் செய்து, கோடீஸ்வரனாக உயர்ந்தான்.

ஆண்டுகள் உருண்டோட, மீண்டும் அதே கிராமத்தில் அவனது நிறுவனம் வேறொரு பெரிய கட்டிடத்தைக் கட்டிக்கொண்டிருந்தது. சொந்த ஊருக்குக் கூட்டிப்போனால் மனைவி மகிழ்ச்சி அடைவாளே என்ற எண்ணத்தில் மனைவியோடு அங்கு போனான்.



விலையுயர்ந்த காரைவிட்டு இறங்கியதுமே அவர்களை வரவேற்றான் அழுக்கு சட்டை அணிந்த காவலாளி ஒருவன். "என்ன லட்சுமி, என்னை ஞாபகம் இருக்கா? நீயும் நானும் எட்டாங்கிளாஸ்வரைக்கும் ஒண்ணா படிச்சோமே... நாயக்கர் தோப்புல நான்கூட உனக்கு மாங்கா பறிச்சிக் கொடுத்திருக்கேனே!" என்று அவன் பேசிக்கொண்டேபோக, கோடீஸ்வரன் மனைவியாகிவிட்ட கிராமத்துப் பெண்ணுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. கணவனைப் பார்த்தாள். அவன் குறும்பாகச் சிரித்தான். இவளும் அசட்டு சிரிப்பை உதிர்த்தபடி நடந்தாள்.

வீட்டுக்குத் திரும்பும்போது, அந்த காவலாளியின் வார்த்தைகளை ஞாபகப்படுத்தி வம்புக்கு இழுத்தான் கணவன். "நல்லவேளை, நீ என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டே... இல்லேன்னா அந்த அழுக்கு காவலாளியை கல்யாணம் பண்ணிக்கிட்டு, அழுக்குப் புடவையோட அலைஞ்சிருக்கணும்!" என்றான்.

மனைவி சடாரென திரும்பி பதில் சொன்னாள். "உங்க அதிர்ஷ்டம், நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க... இல்லேன்னா இந்நேரம் அவன் இல்லே கோடீஸ்வரன் ஆகி, உங்க இடத்துல இருந்திருப்பான்!"

**குடும்ப உறவுகளில் குத்தல் கூடாது!**

**நிதர்ஸனா**


Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

நிதர்ஸனா

# கடைசி பக்கம்

மன்னருக்கு மீன் கொண்டுவந்தான் ஒரு மீனவன். ''அரிதான இந்த மீனை, தாங்கள் வாங்குவதுதான் பொருத்தமாக இருக்கும்!'' என்றான். மன்னரும் மகிழ்ந்து அவனுக்கு ஐந்தாயிரம் பொற்காசுகள் கொடுத்தார்.

மகாராணி கொதித்துவிட்டார். ''ஒரு அற்ப மீனுக்கு இவ்வளவு பணமா? அதைத் திரும்ப வாங்குங்கள்'' என்றார். ''முடிந்த வியாபாரத்தை மாற்றுவது அழகல்ல'' என்று மன்னர் மறுத்தார்.

''சரி, அவனைக் கூப்பிட்டு இந்த மீன் ஆணா, பெண்ணா என்று கேளுங்கள். 'ஆண் மீன்' என்று அவன் சொன்னால், 'எனக்கு பெண் மீன்தான் வேண்டும்' என்று சொல்லி திருப்பிக் கொடுங்கள். 'பெண்' என்றால், 'ஆண் மீன்தான் வேண்டும்' என்று கேளுங்கள். எப்படியும் அவனிடமிருந்து பொற்காசுகளைப் பிடுங்கியாக வேண்டும்'' என்றார் மகாராணி.

மீனவன் திருப்பி அழைக்கப்பட்டான். மகாராணி கேள்விக்கணையை வீசியதும் அவன் உஷாராகி பதில் சொன்னான்... ''இது ஆணுமில்லை; பெண்ணுமில்லை. இரண்டின் குணங்களும் கொண்ட அதிசய மீன். அதனால்தான் இதை மன்னருக்குக் கொண்டுவந்தேன்!''

இந்த பதிலால் நெகிழ்ந்த மன்னர், மேலும் ஐந்தாயிரம் பொற்காசுகளைக் கொடுத்தார். அந்த மூட்டையோடு போகும்போது, அதிலிருந்து ஒரு காசு தரையில் விழுந்தது. தேடி அதை எடுத்தான் மீனவன். மகாராணி கோபத்தின் உச்சிக்கே போனார். ''பேராசைக்காரன்... கீழே விழுந்த காசை யாராவது வேலைக்காரர்கள் எடுத்துப் போகட்டும் என்று விடுகிறானா பாருங்கள்'' என்றார் மன்னரிடம்.



அவன் நிதானமாகத் திரும்பி சொன்னான்... ''நான் பேராசையில் அதை எடுக்கவில்லை மகாராணி. அந்த நாணயத்தில் மன்னரின் உருவம் இருக்கிறது. யாராவது தெரியாமல் அதை மிதித்தால்கூட என்னால் தாங்கிக்கொள்ள முடியாது!''

இதில் இன்னும் நெகிழ்ந்த மன்னர், மேலும் ஐந்தாயிரம் பொற்காசுகளைக் கொடுத்தார். இனியும் தான் பேசினால், அவன் இன்னும் பொற்காசுகளை வாங்கிவிடுவானோ என்ற பயத்தில் மகாராணி வாயை மூடிக்கொண்டார்.

**யாரிடம், எப்போது, எப்படிப் பேசவேண்டும் என்று தெரிந்திருப்பவர்களே ஜெயிக்கிறார்கள்!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

# அந்தப் பக்கம்

● நிதர்ஸனா

ரயிலில் ஏக நெரிசல். அந்தப் பெட்டியின் ஜன்னலோரம் இருக்கும் இரண்டு இருக்கைகளில் அமர்ந்திருந்தார்கள் அவர்கள். அறுபதைத் தாண்டிய நரைமுடியோடும், நெற்றிச் சுருக்கங்களோடும் ஒரு முதியவர். எதிரே அவரது மகன். முப்பது வயது இருக்கலாம். முகத்திலும் பேச்சிலும் குழந்தைத்தனமான உற்சாகம்.

ஜன்னலுக்கு வெளியே தெரியும் காட்சிகளை ரசித்தபடி வந்தவன், ‘‘அப்பா, இந்தப் பச்சை மரங்கள் வேகமாக பின்னால் நகரும் காட்சி அற்புதம்!’’ என்றான். ‘‘அந்த வயல்களைப் பாருங்கள்...’’ என்றான். ‘‘குளத்துக்கு மேலே வெள்ளையாகப் பறக்கின்றனவே... அவைதான் கொக்குகளா?’’ என்று கேட்டான். அப்பாவும் உற்சாகத்தோடு அவனுக்கு பதில் சொல்லிக்கொண்டே வந்தார்.

பெட்டியில் இருந்த சக பயணிகளுக்கு இது விசித்திரமாக இருந்தது. ‘மூன்று வயது குழந்தைமாதிரி நடந்துகொள்கிறானே... இவன் என்ன பைத்தியமா?’ என தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டனர். ஒரு இளைஞன் சத்தமாகவே, ‘சரியான கிராக்’ என்றான். அப்பாவும் மகனும் இதைக் காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை. ஜன்னலுக்கு வெளியே தெரியும் காட்சிகளில் லயித்துவிட்டனர்.

கொஞ்ச நேரத்தில் திடீரென மழை பெய்தது. திறந்திருந்த ஜன்னல் கதவு வழியே மழைத்துளிகள் உள்ளே விழுந்தன. ‘‘பாருங்கள் அப்பா... இந்த மழைத்துளிகள் கம்பிகள்மாதிரி வந்துவிழும் காட்சியைப் பார்க்க பரவசமாக இருக்கிறது’’ என்றான் அந்த மகன். பக்கத்தில் உட்கார்ந்திருந்த மற்ற பயணிகள் மழையில் நனைவதில் எரிச்சலானார்கள். ஜன்னலை மூடச் சொன்னாலும் அவன் கேட்பதாக இல்லை.

ஒருவர் எரிச்சலாகி, ‘‘உன் மகனுக்கு மூளை சரியில்லை என்றால் மென்டல் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்! இப்படி பொதுமக்கள் பயணிக்கும் ரயிலில் கூட்டிவந்து மற்றவர்களை அவஸ்தைப்பட வைக்காதே!’’ என்றார்.

அந்த முதியவர் மிருதுவான குரலில் பதில் சொன்னார்... ‘‘ஸாரி! உங்களுக்கு ஏற்பட்ட தொந்தரவுகளுக்காக என்னை மன்னித்துவிடுங்கள். நாங்கள் இப்போதுதான் ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கிறோம். என் மகனுக்கு பிறவியிலிருந்து பார்வை கிடையாது. இப்போதுதான் பார்வை கிடைத்தது. இந்த மரங்கள், மழை எல்லாமே அவன் கண்களுக்கு புதுசு... அதனால்தான் இப்படி!’’

**கண்ணால் காண்பது பொய்; உண்மை அதன் பின்னால் ஒளிந்திருக்கிறது!** ●



If You Want More Free E-books

# கடைசி பக்கம்

புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் அந்த பிரமாண்டக் கோயிலைப் பார்வையிடப் போனார் தொழிலதிபர் ஒருவர். அந்தக் கோயிலின் உருவாக்கத்துக்கு தாராளமாக நன்கொடை அளித்தவர் என்பதால், அவரை பணிகள் நடக்கும் எல்லா இடங்களுக்கும் அழைத்துச்சென்று காட்டினார்கள் கோயில் நிர்வாகிகள்.

நூற்றுக்கால் மண்டபத்துக்கான தூண்களும் சிற்பங்களும் செதுக்கப்பட்டுக் கொண்டிருந்த இடத்தில் மெய்மறந்து நின்றுவிட்டார் அந்தத் தொழிலதிபர். தூணிலிருந்து நரசிம்மமாக வெளிப்பட்டு, பகவான் இரணிய வதம் செய்யும் காட்சியை ஒரு தூணில் மிக நேர்த்தியாக செதுக்கிக் கொண்டிருந்தான் இளம் சிற்பி ஒருவன். பக்கத்திலேயே அதே சிற்பத்துடன் இன்னொரு தூணும் இருந்தது.

“ஒரே மாதிரி இருக்கும் இந்த இரண்டு தூண்களையும் அருகருகே வைக்கப் போகிறீர்களா?” என்று கேட்டார் தொழிலதிபர்.

“இல்லை, நமக்குத் தேவை ஒன்றே ஒன்றுதான். அந்தத் தூணில் சிற்பத்தை செதுக்கி முடிக்கும் தறுவாயில் கொஞ்சம் சேதாரம் ஆகிவிட்டது. அதனால் புதிதாக வேறு ஒன்றை செதுக்குகிறேன்...” என்றான் சிற்பி.

“என்ன சேதாரம்?”

சிலையாக இருக்கும் நரசிம்மரின் தலைப் பகுதியைக் காட்டினான் சிற்பி. “இந்த இடத்தில் ஒரு சின்ன கீறல் விழுந்திருக்கிறதே... அதுதான்! வேறுவழியில்லாமல் புதிதாக செதுக்கும்படி ஆயிற்று!” என்றபடி தன் வேலையைத் தொடர்ந்தான் சிற்பி.

உண்மையில் அந்த உயரமான தூணின் மேல்பகுதியிலேயே அந்த சிலை வரப்போகிறது என்பதையும், தரையிலிருந்து சுமார் இரண்டு ஆள் உயரத்துக்கு மேலே இருக்கப்போகும் சிலையின் தலைப்பகுதியில் விழுந்த ஒரு சின்ன கீறல், கீழே இருந்து பார்க்கும் யாருக்கும் தெரியாது என்பதையும் மற்றவர்களிடம் விசாரித்துத் தெரிந்துகொண்ட அந்தத் தொழிலதிபர், “அந்தக் குறை யாருக்கும் தெரியாதே... பிறகு ஏன் மெனக்கெட்டு இன்னொன்றை உருவாக்குகிறீர்கள்?” என்று கேட்டார்.

சிற்பி நிதானமாக பதில் சொன்னான்... “யாருக்கும் தெரியாது என்று யார் சொன்னது... எனக்குத் தெரியும்; கடவுளுக்கும் தெரியும்!”



**அடுத்தவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்வது வேலை இல்லை; நம் முழுதிருப்திக்காகச் செய்வதே வேலை!**

**•நிதர்ஸனா**

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

நிதர்ஸனா

ஒவ்வொரு ஆண்டும் அறுவடைக்காலம் முடியும் நேரத்தில், அந்த வட்டாரத்தில் விவசாயிகளுக்கான போட்டி நடக்கும். எல்லா வயல்களிலும் விளையும் நெல்மணிகளை விவசாயிகள் எடுத்துவந்து குவிக்க, நிபுணர்கள் வந்து பரிசோதித்து, அதில் தரமான நெல்லை விளைவிக்கும் விவசாயிக்கு பரிசு கொடுப்பார்கள். ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட ஒரே விவசாயி தான் பரிசை வாங்கிக் குவித்துக் கொண்டிருந்தான்.

நிபுணர்களுக்கு ஆச்சரியம்! எப்படி இவன் மட்டுமே திரும்பத் திரும்ப பரிசு வாங்குகிறான்? நேரடியாக அவன் வயலுக்கே போய்ப் பார்க்க முடிவெடுத்தார்கள். இவர்கள் போன நேரத்தில் அந்த விவசாயி தனது வயலில் விளைந்த நெல்லில் ஒரு பகுதியை பக்கத்து நிலங்களின் விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தான். நிபுணர்கள் புரியாமல் விழிக்க, அவன் காரணம் சொன்னான்... ‘‘நான் மட்டும் நல்ல விதை போடுவதால் எந்த பயனும் இல்லை; பக்கத்து நிலங்களில் மோசமான விதை போட்டால், அது காற்றில் என் நிலத்திலும் வந்து விழுந்து என் பயிரையும் தரமற்றதாக்கிவிடும். அவர்களுக்கும் தரமான விதை வேண்டுமே... அதற்காக நானே விதை கொடுக்கிறேன். நாம் நன்றாக வாழ வேண்டும் என்றால், சுற்றியிருப்பவர்களும் நன்றாக இருக்க வேண்டும்!’’

‘‘சரி... நீ கொடுக்கும் விதையை வைத்து அவர்கள் விளைவிக்கும் நெல், போட்டியில் பரிசு வாங்கிவிடுமே!’’ என்று நிபுணர்கள் திரும்பவும் கேட்டார்கள். ‘‘வெறும் விதை மட்டுமே விளைச்சலைத் தீர்மானிப்பதில்லை. அதை விளைவிக்க சிறந்த உழைப்பைத் தரவேண்டும்; களை எடுப்பது, உரம் போடுவது என எந்த நேரத்தில் என்ன செய்வது என்ற திட்டமிடல் வேண்டும். இந்த இரண்டும் என்னிடம் இருப்பதால்தான் எப்போதும் ஜெயிக்கிறேன்’’ என்றான்.



**சுற்றியிருப்பவர்களையும் நல்லவர்களாக வைத்திருப்பதே வெற்றி மந்திரம்!**


Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கதை பக்கம்

ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை கொண்ட அவனுக்கு ஒருநாள் கடவுள் தரிசனம் தந்தார். கடவுளோடு பேசிக்கொண்டிருக்கையில், அவனது வாழ்க்கையில் நடந்த முக்கியமான சம்பவங்கள் காட்சிகளாக கடற்கரை மணல்திட்டில் தெரிந்தன. இரண்டு ஜோடி பாதச்சுவடுகளை காட்சிகளின் அடியில் அவன் பார்க்கமுடிந்தது. ஒரு ஜோடி அவனுடையவை; இன்னொரு ஜோடி கடவுளுடையவை என்பது அவனுக்குப் புரிந்தது.

ஆனால் வாழ்க்கையின் இக்கட்டான தருணங்கள் காட்சிகளாக விரிந்தபோது, ஒற்றை ஜோடி பாதச்சுவடுகள் மட்டுமே அவன் கண்ணில் பட்டன. ''என்ன கொடுமை கடவுளே இது... நான் கஷ்டத்தில் இருந்தபோதெல்லாம் என்னைவிட்டு ஓடிவிட்டீர்களா? ஒரு ஜோடி பாதச்சுவடுகள் மட்டும் தெரிகின்றனவே... இதற்கு என்ன அர்த்தம்?'' என்று அவன் கோபமாகக் கேட்டான்.

கடவுள் சிரித்தபடி சொன்னார்... ''அவசரப்படாதே, நன்றாக அங்கு பார்! அதில் தெரிபவை நீ நடந்த பாதச்சுவடுகள் இல்லை. அவை என்னுடையவை. இக்கட்டான அந்த தருணங்களில் நான் உன்னை முதுகில் சுமந்துசென்றேன்... எனது பாதுகாப்பில்தான் நீ அதையெல்லாம் சமாளித்தாய்!''

ஆபீசில் அவனுடைய வேலை, நெருக்கடிகள் நிறைந்தது. ''நீ கவலைப்படாதே... நான் இருக்கிறேன்'' என்று அவனது மேனேஜர் அடிக்கடி சொல்வார். அவரை கடவுள் போலவே அவன் நினைப்பதுண்டு. கடவுளை சந்தித்த மறுநாள், அவனது ஆபீசில் நிகழ்ந்த கடந்தகால சம்பவங்கள் கம்ப்யூட்டர் திரையில் காட்சிகளாக அவன்முன் ஓடின. கஷ்டமான வேலைகளை செய்தபோது, அதிலும் ஒற்றை ஜோடி பாதச்சுவடுகளையே அவன் பார்த்தான்.



உடனே மேனேஜரிடம் போனான். கடவுளிடம் கேட்டதுபோலவே, ''கஷ்டமான வேலைகளைச் செய்தபோது என்னைத் தனியாக தவிக்க விட்டுவிட்டு ஏன் போனீர்கள்?'' என்று கேட்டான்.

மேனேஜர் நிதானமாகச் சொன்னார்... ''நான் எப்போதும் உன்னைவிட்டுப் போனதில்லை. இக்கட்டான தருணங்களில் நீ பார்த்தாயே ஒரு ஜோடி பாதச்சுவடுகள்... அவை உன்னுடையவைதான்! நீ கஷ்டங்களை சமாளிக்கமுடியாமல் தவித்தபோது, நான் உன் தலையில் ஏறி உட்கார்ந்திருந்தேன்!''

**கஷ்டங்களை, கஷ்டப்பட்டாவது நாம்தான் சமாளிக்க வேண்டும்!**

●நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கதை பக்கம்



ஒரு குறுநில மன்னனிடம் மந்திரியாக இருந்த அவர், எல்லாம் நன்மைக்கே என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர். மன்னனுக்கும் அவருக்கும் இடையே ஆழமான நட்பு நிலவியது. மந்திரி துணையின்றி எங்கும் போக மாட்டான் மன்னன்.

ஒருநாள் இருவரும் வேட்டையாட காட்டுக்குக் கிளம்பினார்கள். மன்னனின் வில்லில் நாண் பூட்டும்போது மந்திரி அவசரத்தில் ஏதோ தவறு செய்துவிட்டார். மன்னன் அம்பு எய்யும்போது எசகுபிசகாகி, அவனது வலது கை கட்டைவிரல் துண்டாகி விழுந்துவிட்டது. வலியால் துடித்தான் அவன். வழக்கம்போல், ‘‘எல்லாம் நன்மைக்கே’’ என்றார் மந்திரி. மன்னனுக்கு ஆத்திரம் வந்தது. ‘‘இது நன்மையில்லை... துன்பம்!’’ என்றான். ‘‘இல்லை மன்னா, இறைவன் இப்படிச் செய்ததற்கு ஏதோ காரணம் இருக்கும்’’ என்றார் மந்திரி. ஆத்திரத்தின் உச்சிக்கே போன மன்னன், மந்திரியை சிறையில் அடைக்க உத்தரவிட்டான்.

மாதங்கள் கழிந்தன. அடுத்த முறை வேட்டைக்கு மன்னன் தனியாகக் கிளம்பினான். காட்டுக்குள் நீண்ட தூரம் போய்விட்ட அவன், மனித மாமிசம் சாப்பிடும் ஆதிவாசி கும்பலிடம் சிக்கிக்கொண்டான். அவர்கள் அவனை இழுத்துப்போய், பலி கொடுக்க பூஜைகளை ஆரம்பித்தனர். கழுத்தை வெட்டுவதற்கு முன்னால் மன்னனை சோதித்த ஆதிவாசி தலைவன், அவனது கட்டைவிரல் இல்லாமல் இருப்பதை கவனித்தான். ஊனம் இருப்பவர்களை பலிகொடுத்து, சாப்பிடக்கூடாது என்பது அவர்கள் மரபு! அதனால் அவனை விடுவித்தார்கள்.

தப்பித்தோம் பிழைத்தோம் என்று நாடு திரும்பிய அவன், சிறைக்குப் போய் மந்திரியைப் பார்த்து கண்ணீர் உகுத்தான். ‘‘தேவையில்லாமல் உன்னை சிறையில் வாட்டிவிட்டேன்’’ என்றான். அப்போதும் அவர், ‘‘இதுவும் நன்மைக்கே’’ என்றார். ‘‘எப்படி?’’ என குழம்பினான் மன்னன்.

‘‘நான் சிறையில் இல்லாமல் உங்களோடு வந்து அந்த கும்பலிடம் மாட்டியிருந்தால், என்னை பலியிட்டு இருப்பார்கள்தானே!’’ என்றார் மந்திரி.

**எந்த இழப்பையும் பாஸிட்டிவ்வாக எடுத்துக்கொள்ள வேண்டும்!**

• நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books



# கடைசி பக்கம்

நிதர்ஸனா

வறிய குடும்பத்தில் பிறந்தாலும், நன்றாகப் படிக்கும் சிறுவன் அவன். தோட்டத்தில் காய்கறிகளை விளைவித்து, அவற்றை தலையில் சுமந்து விற்று, அதில் வரும் வருமானத்தில் குடும்பமும் படிப்பும் நடந்தது. காலையில் தெருத்தெருவாகச் சுற்றி விற்றுவிட்டு, அவசரமாக பள்ளிக்கூடம் ஓடுவான்.

ஒருநாள் அப்படி பசியோடு பக்கத்து ஊரில் விற்கும்போது, அவனால் நடக்கவே முடியவில்லை. வெட்கத்தைவிட்டு ஏதாவது ஒரு வீட்டில் சாப்பாடு கேட்கலாம் என்று முடிவெடுத்தான். கொஞ்சம் பெரிதாகத் தெரிந்த வீட்டின் கதவைத் தட்ட, திறந்தது ஒரு இளம்பெண். அவளைப் பார்த்ததும் வெட்கத்தில் குரல் வர மறுத்தது. சாப்பாடு கேட்கும் எண்ணத்தைக் கைவிட்டு, "கொஞ்சம் தண்ணீர்'' என்றான். அவனது முகத்தில் பசியின் ரேகையைப் பார்த்த பெண், உள்ளே கூப்பிட்டு சாப்பாடு போட்டாள். பதிலுக்கு அவன் காய்கறிகள் தர, அவள் மறுத்தாள். ''பசியோடு வரும் யாருக்கும் பிரதிபலன் கருதாமல் உணவிடுவது கடமை'' என்றாள்.

வருடங்கள் உருண்டோட, அவன் இப்போது பக்கத்து நகரத்தின் பிரபல மருத்துவமனையின் தலைசிறந்த டாக்டர். ஒருநாள் விசித்திரமான நோயோடு நடுத்தர வயதுப் பெண்மணி ஒருத்தி அந்த மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தாள். 'அவள் பிழைக்கவே சான்ஸ் இல்லை' என்று மற்ற டாக்டர்கள் உதட்டைப் பிதுக்கினார்கள். விஷயம் அவன் காதுக்கு வந்தது. அவளது ஊரைக் கேட்டதும் அவனுக்குள் பொறி தட்டியது. ஓடிப்போய் பார்த்தான்... ஆமாம், அவனுக்கு உணவிட்ட அதே பெண்தான் அந்த நோயாளி. தனிப்பட்ட கவனம் எடுத்து அவளைத் தேற்றினான்.

நம்பமுடியாத அதிசயமாக அவள் பிழைத்தாள். ஆனாலும் அவளுக்குக் கவலை. பெரிய டாக்டர் தனிப்பட்ட கவனம் எடுத்து சிகிச்சை தந்ததால், பில் நிறைய வருமே... எப்படித் தருவது. டிஸ்சார்ஜ் ஆகும் சமயத்தில் அவளுக்கு பில் வந்தது. 'சிகிச்சைக்கான தொகையை, 20 ஆண்டுகளுக்கு முன் எனக்கு சாப்பாடு போட்டுக் கழித்துவிட்டீர்கள்' என்று எழுதியிருந்த பெரிய டாக்டரை இப்போது அவளால் அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்தது.

**பிரதிபலன் பாராத உதவிக்கும் என்றோ ஒருநாள் பலன் கிடைக்கும்!**


Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

கடற்கரையை ஒட்டிய அந்தக் காட்டில் வசித்துவந்த முயல் துடுக்குத்தனமும் குறும்புச் செய்கைகளும் நிறைந்தது. ஒரு நாள், பெரிய மரத்தை முறித்து, டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்த யானையைப் பார்த்தது அது. ''அடேயப்பா, இவ்வளவு சாப்பிடுகிறாயே!'' என்று சத்தமாகக் கேட்டது.

முயலை ஏளனமாகப் பார்த்த யானை, ''என்ன செய்வது, உன்னை மாதிரி அற்ப விலங்குகளுக்கு ஒரு வேரோ, கிழங்கோகூட ஒரு நாள் பசிக்குப் போதுமானது. என்னை மாதிரி பெரிய, பலசாலியான ஜீவன்கள் இப்படித்தான் சாப்பிடும்'' என்றது.

''நீ பெரிதாக இருக்கிறாய், சரி... ஆனால் பலசாலியா?'' என்று கேட்டது முயல்.

சிரிப்பும் கோபமும் சேர்ந்துகொள்ள, முயலை முறைத்தது யானை. ''சும்மா முறைக்காதே... என் பலத்தைப் பற்றி உனக்குத் தெரியாது... உன் வயிற்றில் ஒரு கயிற்றைக் கட்டி இழுத்துப் போய் கடலில் எறிந்துவிடும் அளவுக்கு நான் பலசாலி!'' என்று கம்பீரமாகச் சொன்னது முயல்.

''முடிந்தால் செய்து பார்!'' என்று சவால் விட்டது யானை.

அதன் வயிற்றில் ஒரு கயிற்றைக் கட்டிய முயல், நேராக கடற்கரைக்குப் போனது. தூரத்துக் கடலில் நீந்திக் கொண்டிருந்த திமிங்கலத்தை அழைத்து, ''நீ பெரிய பலசாலியா?'' என்று வம்பிழுத்தது. ''இந்த பூமியிலேயே பலசாலி நான்தான்!'' என்றது திமிங்கலம். ''உன்னை ஒரு கயிறு கட்டி கரைக்கு இழுத்துவிடும் அளவுக்கு பலசாலி நான்!'' என்று அதனிடம் சொன்ன முயல், யானையைக் கட்டிய கயிற்றின் இன்னொரு முனையை திமிங்கலத்தின் வயிற்றில் கட்டிவிட்டு, ஒரு மறைவான இடத்துக்குப் போய் நின்று கொண்டு, திமிங்கலத்தை இழுக்கச் சொன்னது. இடையில் இருந்த காடு மறைக்க, யார் யாரை இழுக்கிறோம் என்று தெரியாமல் யானையும் திமிங்கலமும் தடுமாறின. ஒரு கட்டத்தில் கயிறு அறுந்துவிட, இரண்டும் விட்டால்போதும் என்று ஓட்டம் பிடித்தன. அன்றுமுதல் முயலைப் பார்த்தால் இரண்டும் எல்லையில்லா பணிவு காட்ட ஆரம்பித்தன.



**சாமர்த்தியம் இருந்தால் எவ்வளவு பெரிய எதிரியையும் சமாளிக்கலாம்!**

■நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books



# கடைசி பக்கம்



வருஷத்தின் எந்த நாட்களில் குளிர் நடுக்கும் என்பது தொடர்பாக புலியும் கரடியும் வாக்குவாதம் செய்தன. ‘‘பனி கொட்டும் டிசம்பர் முதல் பிப்ரவரி வரையிலான மாதங்களில்தான் குளிர் வாட்டி எடுக்கும் என்பதை எந்த முட்டாளும் மறுக்கமாட்டான்’’ என்றது புலி.

ஆனால் கரடி இதை ஏற்கவில்லை. ‘‘பனி நாட்களில் எனக்கு குளிரே எடுக்காது. மழை பெய்யும் அக்டோபர், நவம்பர் மாதங்களில்தான் என் உடல்முழுக்க நனைந்து, கம்பளம் போல என்னைப் போர்த்தியிருக்கும் முடியெல்லாம் ஈரமாகி, குளிர் நடுக்கும். எனக்குத் தெரிந்து வருஷத்தில் அந்தக்காலம்தான் குளிர்காலம்’’ என்றது கரடி.



இரண்டு பேரும் இப்படி வாக்குவாதம் செய்து கொண்டிருந்த நேரத்தில் ஒரு வழிப்போக்கன் அவர்கள் கண்ணில் தென்பட்டான். ‘அவனிடமே விஷயத்தைச் சொல்லி, நடுநிலையான தீர்ப்பை வழங்கச் சொல்லலாம்’ என்றபடி இரண்டும் அவனை நெருங்கின. இரண்டையும் பார்த்து நடுநடுங்கிப் போன அவன், புலியும் கரடியும் சொன்ன வாதங்களால் இன்னும் குழம்பிப் போனான்.

‘நடுநிலையாக யோசித்து ஒரு தீர்ப்பைச் சொல்’ என அவனுக்கு கட்டளையிட்ட புலி, அவனை தனியே அழைத்துப் போய், ‘‘கரடி சொன்னதுதான் சரி என தீர்ப்பு சொன்னால் உன்னை அடித்துக் கொன்றுவிடுவேன்’’ என்று உறுமியது. கரடியும் அவனை தனியே அழைத்துப் போய், ‘‘புலிக்கு ஆதரவாகத் தீர்ப்பு சொன்னால் உன் கை, கால்களை பிய்த்து எறிந்துவிடுவேன்’’ என கோபமாக எச்சரித்தது.

அவர்கள் வழியிலேயே போனால்தான் உயிர் பிழைக்க முடியும் என்பதை உணர்ந்த வழிப்போக்கன், முதலில் புலியை தனியாக அழைத்தான். ‘‘நீ சொல்வதுதான் சரி. ஆனால் இந்த உண்மையை நான் சொன்னால் உன்னை உதைக்கப் போவதாக கரடி பயமுறுத்துகிறது. அது உன்னை உதைப்பதற்குமுன் நீ கரடியைக் கொன்றுவிடு’’ என்றான்.

புலி கோபத்துடன் கரடியை முறைக்க, கரடியை தனியாக அழைத்த வழிப்போக்கன் இதே பாணியில் அதனிடமும் சொல்லி, புலியை தாக்குமாறு அட்வைஸ் செய்தான். இரண்டும் ஆக்ரோஷமாக மோதிக்கொண்ட அந்த இடைவெளியில் அவன் தப்பி ஓடினான்.

நீதி

**எதிரிகளை பிளவுபடுத்தினால் எப்போதும் ஜெயித்துக் கொண்டிருக்கலாம்!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கதைப் பக்கம்

அந்தப் பேரரசனுக்கு பக்கத்து நாட்டு அரசர் ஒரு பூனையைப் பரிசாகக் கொடுத்தார். தங்க அங்கி அணிந்து கம்பீரமாக இருந்த பூனையை பேரரசருக்கு மிகவும் பிடித்துப் போனது. எப்போதும் அது பேரரசர் மடியிலேயே இருக்கும். அவரைச் சந்திக்க வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலரும் பூனையைப் பார்த்ததும், “இதன் பெயர் என்ன?” என்று கேட்க ஆரம்பித்தார்கள். “எதுவும் பெயர் வைக்கவில்லை” என்று சொல்லிச் சொல்லி அலுத்துப் போனது அவருக்கு.

இனிமேலும் பொறுக்க வேண்டாம் என பெயர் வைத்துவிட ஒருநாள் முடிவெடுத்தார். மந்திரிகளிடம் ஆலோசனை கேட்டார். “புலி என்று பெயர் வைக்கலாம்; பூனையும் புலிக் குடும்பத்தைச் சேர்ந்ததுதான். புலி பலமும் புத்திக்கூர்மையும் நிறைந்தது” என்றார் ஓர் அமைச்சர்.

“புலி புத்திசாலிதான்; ஆனால் பலசாலி இல்லை. அது தரையில் மட்டும்தான் இருக்கும். ஆனால் கழுகு அதையே மிரட்டிவிடும். வானத்தையும் ஆளும் பறவை அது. அதன் பெயரை வைக்கலாம்” என்றார் இன்னொருவர்.

“கழுகு ஒரு குறிப்பிட்ட உயரம்வரை மட்டுமே பறக்கும். ஆனால் மேகம் அதைவிட உயரத்துக்குப் போகும். அதன் பெயரை வைக்கலாம்” என்றார் மூன்றாமவர்.

“மேகம் எங்கே போனாலும் அதை அலைக்கழிக்கும் சக்தி வாய்ந்தது காற்று. பெருமரங்களையும் வேரோடு சாய்க்கும் காற்றைவிட பலமானது வேறெதுவும் இல்லை. அதுதான் பொருத்தமான பெயர்” என்றார் இன்னொருவர்.



“காற்று எங்கு வேண்டுமானாலும் மோதலாம். ஆனால் கல் சுவரை அதனால் ஒன்றும் செய்ய முடியாது. எந்த சூறாவளியையும் சமாளித்துவிடும் சுவர். அதுதான் பலமான, பொருத்தமான பெயர்” என்றார் ஒரு இளம் மந்திரி.

“ஆனால் அந்த சுவரையே சிதைத்து வளை தோண்டி இங்குமங்கும் போகும் எலி. சுவரைவிட அதுதான் பலசாலி” என்றார் வேறொருவர்.

“எலிகள் எல்லாம் பூனைக்கு பயந்து நடுங்கும். அப்படியானால் பூனைதானே பலசாலி” என்றார் மூத்த மந்திரி.

அங்கு சுற்றி, இங்கு சுற்றி கடைசியில் பூனைக்கு பூனை என்றே பெயர்வைக்கச் சொன்னதால் வெறுத்துப்போன பேரரசர், “இதற்குப் பெயரே வேண்டாம்” என்று சொல்லி விட்டார்.

**அற்ப விஷயங்களுக்கு மண்டையைக் குடைந்தால் தலைவலிதான் மிஞ்சும்!**

நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

## ■ நிதர்ஸனா

ஒரு புத்தகத்தைப் படித்து, அதிலிருந்து குறிப்புகளை எடுத்து தீவிரமாக எழுதிக் கொண்டிருந்தது முயல். அந்த வழியாக வந்த நரி, அதை ஆச்சரியத்துடன் பார்த்து விசாரித்தது. ''ஒன்றுமில்லை... ஒரு முயல் நரியை எப்படி சாப்பிடும் என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன்'' என்றது முயல்.

''முட்டாள்தனமாக இருக்கிறதே... புல்லையும் வேரையும் சாப்பிடும் நீ எப்படி என்னைச் சாப்பிட முடியும்?'' என்று கோபமாகக் கேட்டது நரி.

''என் குகைக்கு வா... நிரூபித்துக் காட்டுகிறேன்!'' என்று சிரித்தபடி சொன்னது முயல்.

''ஆனால் நீ மண்ணுக்கடியில் வளை தோண்டியும், மரப் பொந்துகளிலும்தானே வாழ்க்கை நடத்துவாய். நீ எப்போது குகைக்கு குடிபோனாய்?'' என்றது நரி. ''காலம் மாறிக்கொண்டிருக்கிறதே...'' என்றபடி முயல், நரியை ஒரு குகைக்குள் அழைத்துப் போனது.

நடந்த எல்லாவற்றையும் ஒரு ஓநாய் பார்த்துக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் வாயில் ஒரு எலும்புத்துண்டைக் கவ்வியபடி முயல் குகையிலிருந்து வெளியே வருவதைப் பார்த்து ஷாக் ஆனது ஓநாய். முயல் திரும்பவும் ஆராய்ச்சியில் மூழ்கியது.

இப்போது ஓநாய் முயலிடம் வந்து, ''என்ன செய்கிறாய்?'' என்றது. ''ஒரு ஓநாயை முயல் எப்படி சாப்பிடும் என ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன்...'' என்றது முயல். ''நான் ஓங்கி ஒரு உதை விட்டால் நீ காட்டுக்கு வெளியில் போய் விழுவாய்... நீ என்னை சாப்பிடுவதா?'' என்று சிரித்தது ஓநாய். அதையும் குகைக்கு அழைத்துப் போன முயல், கொஞ்ச நேரத்தில் வாயில் ஒரு பெரிய எலும்புத்துண்டோடு வெளிப்பட்டது.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த கரடி இப்போது வந்து, முயலிடம் அதே சந்தேகத்தைக் கேட்டது. ''கரடிகளை முயல் எப்படி கொன்று சாப்பிடும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறேன்'' என்றது முயல். ''என் நக சைஸ்கூட நீ இல்லை... நீ என்னை சாப்பிடுவதா?'' என்று கோபப்பட்டது கரடி. ''என் குகைக்கு வா!'' என்று அதை அழைத்துப் போனது முயல். அந்தக் குகையில் பசித்த சிங்கம் ஒன்று, நரியையும் ஓநாயையும் சாப்பிட்டுவிட்டு, அடுத்த இரைக்காகக் காத்திருந்தது.

**எதிரிகளை சாதாரணமாக மதிப்பிடக் கூடாது!**



# கடைசி பக்கம்


Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கதை பக்கம்

நிதர்ஸனா

அந்த நெசவாளி தன் வீட்டுக்கு வெளியே அமர்ந்து, அழகான கம்பளம் ஒன்றை நெய்து கொண்டிருந்தான். முழங்காலைத் தொடும் நீளத்துக்கு ஜடாமுடி வளர்த்து, முனிவர் மாதிரி தோற்றமளித்த ஆசாமி ஒருவர் வந்து, அவன் நெய்வதையே பார்த்துக் கொண்டிருந்தார். நீண்ட நேரம் கழித்தே அவரைக் கவனித்த நெசவாளி, ''ஐயா, நான் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று பணிவுடன் கேட்டான்.

''ஒன்றுமில்லை அப்பனே, ஒரு கம்பளம் எப்படி உருவாகிறது என்பதை கவனிக்கவே நிற்கிறேன். உன்னுடைய திறமை என்னை மெய்மறக்க வைக்கிறது'' என்றார் அந்த ஆசாமி. அவரது புகழுரையில் மயங்கிய நெசவாளி, தன் வேலையில் இன்னும் தீவிரமானான். அவன் பார்க்காத சமயத்தில், தனது ஜடாமுடியிலிருந்து நிறைய முடிகளைப் பிய்த்து எடுத்து, நெசவாளியின் கம்பளத்தில் போட்டார் அந்த ஆசாமி. கம்பளி இழைகளோடு முடிகளும் கலந்து உருவானது அந்தக் கம்பளம்.

நெய்து முடித்ததும் அதை சந்தைக்கு எடுத்துப் போனான் நெசவாளி. யாராவது வாங்குவார்களா என்று காத்திருந்தபோது, தனக்குப் பின்னால் யாரோ நிற்பதுபோலத் தோன்றவே திரும்பிப் பார்த்தான்... வீட்டு வாசலில் பார்த்த அதே ஆசாமி. ''கம்பளம் எப்படி விற்கப்படுகிறது என்பதைப் பார்க்கவே நிற்கிறேன்'' என்றார் அவர்.

கொஞ்ச நேரம் கழித்து ஒரு முதியவர் வந்து, பேரம் பேசி கம்பளத்தை வாங்கினார். அவர் வாங்கிக்கொண்டு நகர்வதற்கு முன்னாலே ஜடாமுடி ஆசாமி, ''என் பங்கைக் கொடு!'' என்றார் நெசவாளியிடம். ''என்ன பங்கு?'' என்று அவன் குழப்பத்தோடு கேட்டான். ''கம்பளம் நெய்வதற்கு எனது முடிகளையும் பயன்படுத்தினாயே... அதற்கு பங்கு'' என்ற ஜடாமுடி ஆசாமி, முதியவர் வாங்கிய கம்பளத்தைப் பிடுங்கி, ''இதோ... இதெல்லாம் என் முடிகள்'' என்று அடையாளம் காட்டினார்.

நெசவாளிக்கு அந்த நயவஞ்சக ஆசாமியை கழுத்தை நெரித்துக் கொன்றுவிடும் அளவுக்குக் கோபம் வந்தது. ஆனாலும் சந்தையில் பிரச்னை வேண்டாம் என்று கொஞ்சம் பணத்தைக் கொடுத்துவிட்டு, விரக்தியோடு வீடு நோக்கி நடந்தான்.

**போலியாக புகழ்கிறவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்!**





Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

வாழ்ந்து கெட்ட வள்ளல் அவன். கொடுத்துச் சிவந்த கரங்கள், வயிற்றுக்காகக் கையேந்தும் நிலைக்கு வறுமை அவனைத் தள்ளிய நேரத்தில்... ஒரு நாள் அவனுக்கு, 'காசிக்கு போனால் பெரும் புதையல் கிடைக்கும்' என கனவில் ஒரு துறவி சொல்ல, அதை நம்பி அவனும் போனான். இரவானதால் ஒரு சத்திரத்தில் தங்கினான்.

அந்த சத்திரத்துக்குப் பக்கத்தில் ஒரு நகை வியாபாரியின் வீடு இருந்தது. சத்திர சுவரில் துளையிட்டு, வியாபாரியின் வீட்டுக்குள் புகுந்து கொள்ளையடிக்க சில திருடர்கள் முயன்றனர். சத்தம் கேட்டு வியாபாரி கூச்சல் போட, காவலர்கள் ஓடி வந்தனர். திருடர்கள் தப்பிவிட, ஏதுமறியாமல் தூங்கிக் கொண்டிருந்த கனவாளியை கைது செய்த காவலர்கள், சிறையில் அடைத்தனர்.



மறுநாள் நகரக் காவல் தலைவன் அவனை விசாரித்தான். கனவில் கண்டபடி புதையலைத் தேடி வந்த கதையை கனவாளி சொன்னான். பரிதாபமும் பரிகாசமுமாக தலைவன் சிரித்தான்.

''கனவுகளை யாராவது நம்புவார்களா? புதையலைத் தேடிவந்த உனக்கு பிரம்படிதான் கிடைத்தது. எனக்குக் கூடத்தான் புதையல் கனவு அடிக்கடி வருகிறது. 'காஞ்சிபுரத்துக்கு பக்கத்து கிராமம் ஒன்றில், பழமையான ஒரு வீட்டின் தோட்டத்தில் ஏழு மாமரங்கள் இருக்கும். அதில் கிளைகளே இல்லாத ஒரு மாமரத்தின் வேரில் பெரும்புதையல் இருக்கிறது. அதைப் போய் எடுத்துக் கொள்!' என கனவில் ஒரு கிழவன் சொல்கிறான். இதை நம்பி அலைய நான் பைத்தியமா?'' என்றபடி, கனவாளியை விடுதலை செய்தான் அவன்.

இதைக் கேட்ட கனவாளி பரவசமானான். காவல் தலைவன் வர்ணிப்பது தனது வீட்டைப் பற்றித்தான் என்பது அவனுக்குப் புரிந்தது. இதைத் தெரிந்து கொள்ளத்தான் கனவு தன்னை காசிக்கு துரத்தியிருக்கும் என நினைத்த அவன், வீட்டுக்குத் திரும்பி தோண்டியபோது புதையல் கிடைத்தது!

**கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருப்பதாகத் தெரியும் வெற்றி, உண்மையில் நம் காலடியில்தான் கிடக்கிறது.**

நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

நிதர்ஸனா



மத போதகரான அவரிடம், அவரது பையனைப் பற்றி புகார் சொல்ல வந்தார் ஆசிரியர். பள்ளியில் சக மாணவர்களை கோபத்தில் பையன் அடிப்பதாக புகார். பையனை அன்போடு விசாரித்தார் மத போதகர். ''கோபம் வந்தால் நான் என்ன செய்கிறேன் என்பது எனக்கே தெரியவில்லை...'' என்றான் பையன்.

பையனிடம் ஒரு மரப்பலகையையும் கொஞ்சம் ஆணிகளையும் கொடுத்த மத போதகர், ''சரி, இனிமேல் யார்மீது கோபம் வந்தாலும் அவர்களை அடிக்காதே! அதற்கு பதிலாக இந்தப் பலகையில் ஒரு ஆணியை அடி. உன் கோபம் தானாகக் குறைந்துவிடும்'' என்றார்.

மறுநாள் பள்ளிக்கு புத்தகப்பையோடும் பலகையோடும் போன பையன், மாலை வீடு வந்ததும் அந்தப் பலகையை அப்பாவிடம் காட்டினான். அதில் 36 ஆணிகள் அடிக்கப்பட்டிருந்தன. அப்பா எதுவும் சொல்லவில்லை.

அதற்கு அடுத்த நாள் அடிக்கப்பட்டிருந்த ஆணிகளின் எண்ணிக்கை முப்பதாகக் குறைந்திருந்தது. ''பலகை ரொம்ப ஸ்டிராங்கா இருக்கு... ஆணி அடிக்கறதுக்குக் கஷ்டமா இருக்கு'' என புகார் சொன்னான் சிறுவன். அப்பா சிரித்துக் கொண்டார்.

அடுத்தடுத்த நாட்களில் அவன் ஆணியடிக்கும் கஷ்டத்தைத் தவிர்ப்பதற்காகவே கோபத்தைக் குறைத்துக் கொண்டான். கடைசியில் ஒரு நாள் உற்சாகமாக பள்ளியிலிருந்து திரும்பிவந்தான். ''அப்பா, இன்னைக்கு முழுக்க நான் யார் மேலயும் கோபப்படலை'' என்றான். அவனைத் தட்டிக்கொடுத்த அப்பா, ''அப்படியானால் ஒன்று செய்... இந்தப் பலகையிலிருந்து ஒரு ஆணியை பிடுங்கி எடுத்து விடு. இனி நீ கோபப்படாமல் இருக்கும் ஒவ்வொரு நாளும் ஒரு ஆணியை இப்படி பிடுங்கிவிடு!'' என்றார்.

அதன்பின் அவனுக்கு கோபமே வரவில்லை. சில வாரங்கள் போனதும் அப்பாவிடம் அவன் பலகையை எடுத்து வந்தான். ''எல்லா ஆணியும் காலி... பலகை பழையமாதிரியே ஆகிட்டது'' என்றான். அதிலிருந்த ஆணியடித்த பள்ளங்களை சுட்டிக்காட்டிய அப்பா, ''எவ்வளவு தழும்புகள் பார். கோபத்தில் செய்யும் ஒவ்வொரு செயலும் இப்படி மாறாத தழும்புகளை மற்றவர்கள் இதயத்தில் ஏற்படுத்திவிடும்!'' என்றார். ''இனிமேல் எனக்குக் கோபமே வராது'' என்று குற்ற உணர்வோடு சொன்னான் சிறுவன்.

**ஆறாதே நாவினால் சுட்ட வடு!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books



# கடைசி பக்கம்

**நிதர்ஸனா**

கணவனை இழந்த அந்த வறிய பெண்மணி, தன் கணவனின் ஆத்மா சாந்தியடைய என்ன செய்ய வேண்டும் என்று பெரியவர்களிடம் ஆலோசனை கேட்டாள். 'தானம் செய்வதுதான் சிறந்த பரிகாரம்; இயன்றதை தானம் செய்' என்றார்கள் எல்லோரும்.

பட்டினி கிடந்தாவது, வாரம் ஒரு நாள் ஒரு வேளை உணவை யாராவது ஏழைகளுக்கு தானம் செய்ய அவள் உறுதி எடுத்தாள். முதல் வாரம் வெள்ளிக்கிழமை மதியம்... சுவையான விருந்து சமைத்து, தன் பிள்ளையிடம் அதைக் கொடுத்து, பசித்திருக்கும் யாருக்காவது அளித்துவிட்டு வரச் சொன்னாள். அந்த பிள்ளையோ காலையிலிருந்து தண்ணீர் தவிர எதையும் சாப்பிடவில்லை. 'யாருக்கோ தருவதை தான் சாப்பிட்டால் என்ன?' என்ற எண்ணம் அவனுக்குள் எழுந்தது. பசியையும் அந்த எண்ணத்தையும் கஷ்டப்பட்டு கட்டுப்படுத்திய அவன், அதை தெருமுனையில் அமர்ந்திருந்த ஒரு பிச்சைக்காரனுக்கு கொடுத்துவிட்டுத் திரும்பி வந்தான். வீட்டில் அவனுக்காக அம்மா எதையும் மிச்சம் வைத்திருக்காததைக் கண்டு ஏமாற்றம் அடைந்தான். அம்மாவும் சாப்பிடவில்லை என்பதால், அது அவனுக்கு பெரிதாகத் தோன்றவில்லை.

அடுத்த வாரமும் இப்படியே நடந்தது. மூன்றாவது வாரம் அவனால் பசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. 'இறந்த அப்பாவும், இருக்கும் அம்மாவும் என்னை மன்னிக்க வேண்டும்!' என்று மனதுக்குள் சொல்லிக்கொண்ட அவன், அம்மா கொடுத்தனுப்பிய சாப்பாட்டை தெருமுனையில் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு, வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

அன்று இரவு அவனது அம்மா கனவில் அப்பா வந்தார். 'நீ செய்த தானத்தின் பலன் இன்றுதான் எனக்குக் கிடைத்தது... மிக்க நன்றி!' என்றார். பையன் ஏதோ தப்பு செய்திருக்கிறான் என நினைத்த அம்மா, அவனை அடித்து விசாரித்தாள். அவன் நடந்த எல்லாவற்றையும் சொன்னான். அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது... 'பசித்திருக்கும் யாரோ ஒரு பிச்சைக்காரனுக்கு தானம் செய்வதைவிட, தன் சொந்த மகனுக்கு உணவிடுவதுதான் மிகச்சிறந்த புண்ணியம் தரும்.'

**எல்லா நல்ல விஷயங்களையும் வீட்டிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும்!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

குளிர் நடுக்கும் ஒரு இரவில் அந்த தம்பதியினர், சாப்பிட்ட பிறகு தணல் மூட்டி குளிர் காய்ந்து கொண்டிருந்தனர். வேகமாக வீசிய காற்று, வாசல் கதவை விரியத் திறந்துவிட்டது. யார் போய் கதவை மூடுவது என அவர்களுக்குள் போட்டி. 'நீ போ...' என்றான் கணவன். 'நீங்களே போங்க...' என்றாள் மனைவி. அது பெரிய வாக்கு வாதமாகவே முற்றியது.

''சரி, யார் முதல்ல பேசறாங்களோ... அவங்கதான் கதவை மூடணும்'' என்றான் கணவன். அதன்பின் அவர்கள் பேசிக் கொள்ளவில்லை. அப்படியே தூங்க ஆரம்பித்தனர்.

திறந்திருந்த கதவைப் பார்த்ததும் பசித்த நாய் ஒன்று சந்தடியில்லாமல் வீட்டுக்குள் நுழைந்தது. மிச்சம் மீதி உணவுகளைச் சாப்பிட்டுவிட்டு நிதானமாகத் திரும்பிப் போனது. கொஞ்ச நேரம் கழித்து அந்த வழியாக வந்த திருடனுக்கு, திறந்திருந்த கதவைப் பார்த்ததும் சபலம் தட்டியது. சிரமம் இல்லாமல் நுழைந்து, அகப்பட்டதை எல்லாம் சுருட்டிக் கொண்டு கிளம்பினான்.

காலையில் எழுந்து வீடு இருந்த கோலத்தைப் பார்த்த மனைவிக்கு ஒன்றும் புரியவில்லை. அன்றைய சமையலுக்கு வேண்டியதை வாங்கி வரக் கிளம்பிவிட்டாள். கொஞ்ச நேரத்தில் வீட்டுக்கு நாவிதர் வந்தார். கணவனுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே அவனுக்கு முடிவெட்ட ஆரம்பித்தார். அவன் பதில் பேசவில்லை. பாதி வேலை முடிந்தநிலையில் நாவிதருக்கு சந்தேகம் வந்தது. 'இவன் என்ன கேட்டாலும் பதில் பேசவில்லை... என்ன ஆச்சு?' என்ற குழப்பத்தோடு ஏற இறங்கப் பார்த்தார். திக்பிரமை பிடித்ததுபோல் உட்கார்ந்து கொண்டிருந்த அவனுக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாக முடிவுகட்டி, அவர் மிரண்டு ஓட ஆரம்பித்தார்.

வீடு திரும்பிய மனைவி, பாதி கத்தரித்த தலையும், பாதி ஷேவ் செய்த முகமுமாகக் கணவனைப் பார்த்ததும் திகைத்தாள். ''என்ன இது கோலம்?'' என்றாள்.

கணவன் நிதானமாக, ''நீதான் முதல்ல பேசினே... போய் கதவைச் சாத்து!'' என்றான்.



**குடும்பத்துக்குள் குழப்பம் வந்தால் நஷ்டம் எல்லோருக்கும்தான்!**

■ **நிதர்ஸனா**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

நண்பர்களுடன் சேர்ந்து பார்ட்டிக்குப் போனான் அவன். எப்போதும் இல்லாத புதுப் பழக்கமாக அன்று நண்பர்களின் வற்புறுத்தலால் குடித்தான். முதல் முறை என்பதால் அளவு தெரியாமல் தொண்டை முட்டக் குடித்துவிட, போதையின் தள்ளாட்டத்தில் அவனுக்கு எதுவுமே புரியவில்லை. பைக்கை எப்படி ஓட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்தான் என்பது அவனுக்கே புரியவில்லை.

கதவைத் திறந்த மனைவி, அவனைப் பார்த்து திகைத்துப் போனாள். தள்ளாடி உள்ளே நுழைந்தவன், ஹாலில் எதை எதையோ உடைத்துத் தள்ளினான். படுக்கை அறைக்குப் போகும்வரை அவன் உளறிக்கொட்டியது எதுவுமே அவனது ஞாபக அடுக்கில் பதியவில்லை.

காலையில் தூங்கி எழுந்த போதுதான் அவனுக்கு எல்லாம் உறைத்தது. மாபெரும் தவறு செய்துவிட்டோமே என்று வருந்தினான். 'வீடு போர்க்களமாகக் காட்சியளிக்கும்; மனைவி கண்ணீரோடு மூலையில் உட்கார்ந்திருப்பாள்' என்று நினைத்த அவன், குற்ற உணர்வோடு படுக்கையிலிருந்து எழுந்துவந்தான்.

என்ன ஆச்சரியம்... மனைவி புன்சிரிப்போடு அவனை வரவேற்று காபி கொடுத்தாள். டைனிங் டேபிளில் அவனுக்கு டிபன் தயாராக இருந்தது. இரவு அவன் களேபரமாக்கிய ஹால், இப்போது சுத்தமாக இருந்தது. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஸ்கூலுக்கு கிளம்பிக்கொண்டிருந்த குழந்தைகளிடம் விசாரித்தான்.

''ராத்திரி உன்னைப் பார்த்ததும் அம்மா கோபமாதான் இருந்தாங்க; நீயும் அம்மாவை மோசமா திட்டினே. உனக்கு அம்மாவைக்கூட சரியா அடையாளம் தெரியலே. தூங்கறதுக்காக அப்படியே போய் பெட்ல விழுந்தே... அம்மா வந்து உன் ஷூவையும், அழுக்கு டிரஸ்ஸையும் கழட்டினாங்க. அப்போ நீ, 'என்னை விட்டுடு... எனக்கு கல்யாணமாகி, அன்பான மனைவி, அழகான குழந்தைகள் இருக்காங்க...'ன்னு சொன்னே. இதைக்கேட்ட பிறகுதான் அம்மா மாறிட்டாங்க!'' என்றன குழந்தைகள்.

**ஆழமான அன்பு, எல்லா காயங்களையும் ஆற்றிவிடும் மருந்து!**



■ நிதர்ஸனா


Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

நிதர்ஸனா



அறுபது ஆண்டு இல்லற வாழ்க்கையில் அந்தத் தம்பதிகள் தங்களுக்குள் எதையும் ரகசியமாக வைத்திருந்தது இல்லை... ஒரே ஒரு விஷயத்தைத் தவிர! அந்தப் பெண்மணி தன் படுக்கைக்குக் கீழே வைத்திருக்கும் ஒரு பெட்டியை மட்டும் கணவர் திறந்து பார்க்க அனுமதித்ததில்லை. அதைப் பற்றி எதுவும் கேட்கக்கூடாது என்று கணவரிடம் அவள் சொல்ல, அவரும் கண்ணியமாக நடந்துகொண்டார்.

முதுமையின் காரணமாக அவள் உடல்நிலை சீர்கெட, டாக்டர் வந்து பார்த்து, மரணத்தைத் தவிர்க்கமுடியாது என்று கைவிரித்துவிட்டார். அந்த சமயத்தில் கணவருக்கு மனைவியின் பெட்டி ஞாபகத்துக்கு வந்தது. அவளும், "இதுதான் அந்தப்பெட்டியைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள சரியான சந்தர்ப்பம்" என்று சொல்லி, பெட்டியைத் திறந்து பார்க்குமாறு கணவரை வேண்டிக்கொண்டாள்.

பெட்டியை அவர் திறக்க, உள்ளே இரண்டு அழகான பொம்மைகளும் நிறைய பணமும் இருந்தன. எண்ணிப் பார்த்தார். கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் இருந்தது. கேள்விக்குறியோடு மனைவியைப் பார்த்தார். அவள் சொன்னாள்: "சந்தோஷமான மண வாழ்க்கையின் ரகசியமே, வாக்குவாதங்களைத் தவிர்ப்பதில்தான் இருக்கிறது என்று கல்யாணத்தின் போது என் அம்மா எனக்கு அறிவுரை சொன்னார். அதனால் நீங்கள் எது சொன்னாலும் நான் எதிர்த்துப் பேசியதில்லை. எனக்குப் பிடிக்காத விஷயங்களை நீங்கள் பேசும்போது, செய்யும்போது எனக்குக் கோபம் வரும். அப்போது வாக்குவாதம் செய்யாமல், பொம்மைகள் செய்து என் கோபத்தைத் தணித்துக்கொள்வேன்!"

கணவருக்கு கண்களில் நீர் தளும்பியது. பெட்டியில் இருந்தது இரண்டே பொம்மைகள். '60 வருட இல்லற வாழ்க்கையில் இரண்டு தடவை மட்டுமே மனைவியைக் கோபப்படுத்தி இருக்கிறேன்' என ஆறுதலாக நினைத்த அவர், "அது சரி, இந்தப் பணம் ஏது?" என்று கேட்டார்.

"பொம்மைகள் நிறைய சேரச் சேர, அவற்றை விற்று விடுவேனே..!" என்று மனைவி சொன்னதும் அவர் மயங்கிச் சரிந்துவிட்டார்.

**விட்டுக்கொடுப்பதில்தான் வாழ்க்கை இனிக்கிறது!**


Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

■ நிதர்ஸனா

ரோட்டோரமாக இருந்த வயலில் ஏர் உழுது கொண்டிருந்த விவசாயியிடம் பேச்சு கொடுத்தபடியே மரத்தடியில் வந்து அமர்ந்தான் அந்த வழிப்போக்கன். நீண்ட தூரம் நடந்துவந்த களைப்பில் இருந்தவன் போலத் தெரிந்தது. தொலைதூர கிராமம் ஒன்றிலிருந்து வருவதாகச் சொன்ன அவன், ''பிழைப்பு தேடி பக்கத்து நகரத்துக்குப் போகிறேன்... அந்த ஊர் எப்படி?'' என்று விசாரித்தான்.



''முதலில் உங்கள் சொந்த ஊரைப் பற்றிச் சொல்லுங்கள்...'' என்று விவசாயி அவனிடம் கேட்டான்.

''ஐயோ, ஊரா அது. எல்லாரும் திருட்டுப் பசங்க; சோம்பேறிங்க; அடுத்தவங்க உழைப்பைச் சுரண்டி வாழ நினைக்கறவங்க; அவங்களை மாதிரி சுயநலவாதிங்களை இந்த உலகத்துல வேற எங்கயும் பார்க்கமுடியாது. அப்படிப்பட்ட ஒரு ஊரை விட்டு வந்ததுல உள்ளூர சந்தோஷப்படறேன்...'' என்றான் வழிப்போக்கன்.

''அப்படியா?'' என்று யோசித்த விவசாயி, ''உங்களுக்கு மகிழ்ச்சியான தகவல் எதுவும் சொல்ல முடியாது. நீங்கள் இப்போது போகும் நகரத்திலும் அப்படிப்பட்ட மனிதர்களே இருக்கிறார்கள்!'' என்றான். வழிப்போக்கன் ஏமாற்றத்தோடு கிளம்பிப் போனான்.

கொஞ்ச நேரத்தில் இன்னொருவன் வந்து சேர்ந்தான். என்ன ஆச்சரியம்... இவனும் முதல் வழிப்போக்கனின் ஊர்க்காரன்தான். இவனும் பக்கத்து நகரத்துக்குத்தான் பிழைப்பு தேடிப் போகிறான். இவனும் விவசாயியிடம் விசாரித்தான்.

''உங்கள் ஊரைப் பற்றி முதலில் சொல்லுங்கள்...'' என்றான் விவசாயி. முதல் வழிப்போக்கன் திட்டிய அதே ஊர் மக்களை இவன் அப்படிப் புகழ்ந்தான். ''இந்த உலகத்திலேயே அப்படிப்பட்ட நல்லவர்களைப் பார்க்க முடியாது. கடின உழைப்பாளிகள்; நேர்மையானவர்கள்; தாங்கள் கஷ்டப்பட்டாலும் பிறருக்கு உதவி செய்வதில் இன்பம் காண்பார்கள். அங்கிருந்து வெளியேற நேர்ந்ததில் எனக்கு வருத்தம்தான்!'' என்றான் அந்த வழிப்போக்கன்.

விவசாயி சந்தோஷமாக அவனைப் பார்த்து, ''நண்பரே, நீங்கள் அதிர்ஷ்டசாலி. உங்கள் ஊரில் இருப்பதைப் போன்ற நல்லவர்கள் பக்கத்து நகரத்தில் நிறையப் பேர் உண்டு. கவலைப்படாதீர்கள்'' என்றான்.

**நாம் எப்படி இருக்கிறோமோ, அப்படித்தான் பார்க்கும் எல்லோரும் நமக்குத் தெரிகிறார்கள்.**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

■ நிதர்ஸனா

அந்த மதியூகி அமைச்சரை மன்னர் மிகவும் மதித்ததால் மற்றவர்களுக்குப் பொறாமை. வெளிநாட்டிலிருந்து மூன்று அறிஞர்களை வரவழைத்து, அவர்களை வைத்து இந்த மதியூகியின் அறிவை சோதித்து, மட்டம் தட்ட திட்டம் போட்டனர். சோதனைக்கு மன்னரிடமும் சம்மதம் வாங்கிவிட்டனர்.

வந்தவர்கள் குதர்க்கமாக கேள்வி கேட்டு எப்படிப்பட்டவரையும் திகைக்க வைக்கும் சாமர்த்தியசாலிகள். நாட்டு மக்கள் முன்னிலையில் ஒரு மைதானத்தில் சோதனை நடந்தது. ''உலகத்தின் மையப்புள்ளி எங்கே இருக்கிறது?'' என்று முதல் அறிஞர் கேள்வி கேட்டார். இதிலேயே அவர்கள் நோக்கம் மதியூகிக்குப் புரிந்தது.



''உலகத்தின் மையப்புள்ளி என் இடது காலுக்குக் கீழே இருக்கிறது!'' என்றார் அவர். ''எப்படி நம்புவது?'' என எதிர்க்கேள்வி கேட்டார் அந்த அறிஞர். ''வேண்டுமானால் கயிறு எடுத்து, என் காலிலிருந்து இரண்டு பக்கமும் உலகத்தை அளந்து பாருங்கள்; தூரம் சமமாக இருக்கும்'' என்றார் மதியூகி. அதோடு அவர் வாயடைத்துப் போனார்.

அடுத்தவர், ''வானில் எத்தனை நட்சத்திரங்கள் உள்ளன?'' என்று எல்லா அறிவுத்திறன் போட்டிகளிலும் கேட்கும் அதே கேள்வியைக் கேட்டார். ''என் கழுதையின் உடலில் எத்தனை முடிகள் இருக்கின்றனவோ, அத்தனை நட்சத்திரங்கள்'' என்றார் மதியூகி.

''எப்படிச் சொல்கிறாய்?'' என்று வந்த எதிர்க்கேள்விக்கு, ''வேண்டுமானால் கழுதையின் முடிகளை எண்ணிப் பாருங்கள்...'' என்று பதில்தந்து வாயடைக்க வைத்தார் மதியூகி.

மதியூகியின் தந்திரம் மூன்றாம் அறிஞருக்குப் புரிந்தது. அவர் இதேவழியிலேயே மதியூகியை மடக்க நினைத்தார். ''உங்களுக்கு உங்கள் கழுதையை ரொம்ப பிடிக்கும்போல! அதனால் அதைவைத்தே கேள்வி கேட்கிறேன்... உங்கள் கழுதையின் வாலில் எத்தனை முடிகள்?'' என்று கேட்டார். ''உங்கள் தாடியில் எத்தனை முடிகளோ... அதே அளவு!'' என்றார் மதியூகி.

''எப்படி நம்புவது?'' என்று எதிர்க்கேள்வி கேட்டார் அறிஞர்.

''நான் கழுதையின் வாலில் ஒவ்வொரு முடியைப் பிடுங்கும்போதும், உங்கள் தாடியில் ஒரு முடியைப் பிடுங்குங்கள்... கடைசியில் எதுவும் மிஞ்சாது என்பது புரியும்!'' என்றார் மதியூகி. தாடியைப் பிடுங்கும் விபரீத விளையாட்டுக்கு அவர் தயாரில்லை... மூன்று அறிஞர்களும் விட்டால்போதும் என்று ஓட்டம் பிடித்தனர்.

**குதர்க்கமாகப் பேசுபவர்களை அதே வழியில்தான் சமாளிக்க வேண்டும்!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

உலகின் மிக பிரமாண்டமான போர்க்கப்பல் அது. எதையும் வெல்லப் பிறந்தவன் நான் என்ற கர்வத்தில் மிதந்தார் அந்தக் கப்பலின் தளபதி. இப்போதுகூட ஒரு போரை முடித்துவிட்டு, வேறொரு பிரச்னைக்குரிய நாட்டை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தது கப்பல். இரவாக இருந்தாலும் தூங்காமல், அதன் மேல்தளத்தில் கம்பீரமாக நின்றிருந்தார் தளபதி.

அப்போது கப்பலின் கேப்டன் தயக்கத்தோடு அருகில் வந்து, ''சார்! நம் கப்பல் பயணிக்கும் பாதையில் தூரத்தில் ஒரு ஒளி தெரிகிறது. அநேகமாக அது இன்னொரு கப்பலாக இருக்குமோ என்று சந்தேகம் எழுகிறது. மோதினால் இருவருக்குமே சேதம் ஏற்படும்... என்ன செய்யலாம்?'' என்று கேட்டார். தளபதி உடனே சொன்னார்... ''அவனை வேறு திசையில் நகர்ந்து போகச் சொல்!''

கப்பலிலிருந்து உடனடியாக அந்த வெளிச்சம் இருந்த திசையை நோக்கி தந்தி செய்தி போனது, 'இதே பாதையில் எங்கள் போர்க்கப்பலும் பயணிக்கிறது. நீங்கள் வேறு திசையில் செல்லுங்கள்!' என்று. அந்த முனையிலிருந்து உடனே பதில்: 'எங்களால் நகரமுடியாது... நீங்கள் வேறு திசையில் செல்லுங்கள்!'

தளபதி கடுப்பாகிவிட்டார். 'எங்கள் உத்தரவுக்கு நீங்கள் அடிபணிய வேண்டும்' என்று அடுத்த செய்தி அனுப்பினார். அப்போதும், 'நீங்கள் வேறு திசையில் மாறி பயணிப்பது உங்களுக்குப் பாதுகாப்பானது' என்றே பதில் வந்தது.

இப்போது இன்னும் கோபமான தளபதி, 'இதுவரை தோல்வியே காணாத உலகின் மிகப்பெரிய போர்க்கப்பலின் தளபதி உத்தரவிடுகிறேன்; நீ நகர்ந்து வேறு திசையில் செல்கிறாயா? அல்லது குண்டுவீசி உன்னை அழிக்கட்டுமா?'

பதிலும் கோபமாக வந்தது. 'முட்டாளே, யார் உத்தரவிட்டாலும் எங்களால் நகரமுடியாது. உங்கள் எதிரே இருப்பது கப்பல் இல்லை... துறைமுகம். நீங்கள் பார்ப்பது கலங்கரை விளக்கத்தின் வெளிச்சம். நேராக வந்தால் மோதி நொறுங்கி விடுவாய்!'

**கர்வம், கண்ணெதிரே தெரியும் மகத்தான உண்மைகளை மறைத்துவிடும்!**

■ நிதர்ஸனா






Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

● நிதர்ஸனா



அந்த பஸ் காலையில் குறிப்பிட்ட ஒரு நிறுத்தத்தில் நின்றதும் வாட்டசாட்டமான ஒரு ஆசாமி பஸ்ஸில் ஏறினான். இரண்டு பேர் உட்காரும் ஒரு சீட், அவன் உட்கார்ந்ததும் நிரம்பிவிட்டது. பக்கத்தில் ஒரு குழந்தை ஒண்டிக்கொள்ளக்கூட இடமில்லை. கண்டக்டர் அருகில்போனதும், ‘‘வஸ்தாது ஜான் டிக்கெட் வாங்கற பழக்கமில்லை...’’ என்று ஹாயாக சாய்ந்துகொண்டு சொன்னான்.

கண்டக்டரோ நோஞ்சான். அவன் ஊதினாலே விழுந்துவிடுகிற சைஸில் இருந்தார். எதற்கு வம்பு என்று அவர் பேசாமல் நகர்ந்துவிட்டார்.

அதன்பின் இது தினசரி தொடர்கதையானது. அவன் பஸ்ஸில் ஏறுவதும், அலட்சியமாக கண்டக்டரை டீல் செய்வதும் மற்ற பயணிகளுக்கு வேடிக்கை காட்சியானது. ‘‘எங்களை எல்லாம் டிக்கெட் எடுக்கச்சொல்லி கத்தறியே... உன்னால முடிஞ்சா அந்த சண்டியருக்கு டிக்கெட் கொடுத்துப் பாரேன்!’’ என்று சொல்லி சிலர் நமுட்டுச் சிரிப்பு சிரிப்பார்கள்.

கண்டக்டர் அவமானத்தில் தலைகுனிவார். நாள் முழுக்க இதே நினைப்பு அவரை வாட்டும். நாளடைவில் இந்தப் பிரச்னையே அவரைத் தூங்கவிடாமல் செய்தது. ‘இனிமேலும் பொறுக்கமுடியாது’ என்று தீர்மானித்த அவர், அன்றே ஒரு ஜிம்மில் சேர்ந்து உடலைத் தேற்ற முடிவு செய்தார். ஒரு மாத தீவிர பயிற்சிக்குப் பிறகு, ஒரு வாட்டசாட்டமான ஆசாமியை தன்னால் வீழ்த்தமுடியும் என்ற நம்பிக்கை அவருக்கு வந்தது.

மறுநாள் அந்த வஸ்தாது பஸ்ஸில் ஏறி வழக்கம்போல, ‘‘வஸ்தாது ஜான் டிக்கெட் வாங்கற பழக்கமில்லை...’’ என்றதும் கண்டக்டர் உஷ்ணமாக, ‘‘ஏன் பழக்கமில்லை?’’ என்று கத்தினார். பணிவாக எழுந்த அந்த வஸ்தாது, ‘‘நான் பஸ் பாஸ் வச்சிருக்கேங்க...’’ என்று பாக்கெட்டிலிருந்து எடுத்துக் காட்டினான்.

**ஒரு விஷயம் பிரச்னையா... இல்லையா என்பதை அறியாமலேயே, தீர்வுகளைத் தேடிக் குழம்பக் கூடாது!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

■ நிதர்ஸனா

அந்த விவசாயியின் அழகான மகள் மீது, உள்ளூர் வயோதிக செல்வந்தருக்கு ஒரு கண். எப்படியாவது அவளை மணந்துகொள்ளத் துடித்தார் அவர். இதற்காகவே அந்த விவசாயிக்கு தகுதிக்கு மீறி நிறைய கடன் கொடுத்தார்.

கடன்கள் மீதான வட்டி குட்டி போட்டு ஏகத்துக்கும் பெருகிவிட, விவசாயி தனது நிலங்களை விற்றாலும் கடனை அடைக்கமுடியாத நிலை வந்ததும் பஞ்சாயத்துக்குப் போனார் செல்வந்தர். பஞ்சாயத்துத் தலைவர் அவருக்கு நண்பர்.

'வாங்கிய கடனுக்கு பதிலாக உன் மகளை எனக்கு கல்யாணம் செய்து வை!' என செல்வந்தர் கேட்க, பஞ்சாயத்தும் அதை ஆமோதித்தது. 'இந்த வயோதிகனை நான் மணப்பதா?' என்று விவசாயி மகள் கண்ணீர் வடிக்க, ஊர் மக்கள் அவளுக்கு ஆதரவாகக் கூச்சல் போடுகின்றனர்.

செல்வந்தர், தந்திரத்தால் வெல்ல முடிவெடுத்தார். 'ஒரு பைக்குள் இரண்டு கூழாங்கற்களைப் போடுகிறேன். ஒன்று வெள்ளை; இன்னொன்று கறுப்பு. கறுப்புக் கல்லை அந்தப் பெண் எடுத்தால், அவள் என்னை மணந்துகொள்ள வேண்டும்; அவள் அப்பாவின் கடனை ரத்து செய்துவிடுகிறேன். வெள்ளைக் கல்லை எடுத்தால் அவள் என்னை திருமணம் செய்துகொள்ள வேண்டியதில்லை; இருந்தாலும் கடனை தள்ளுபடி செய்துவிடுவேன். எந்தக் கல்லையும் எடுக்க மறுத்தால், அவளது அப்பா ஜெயிலுக்குப் போவார்' என்றார் செல்வந்தர்.



ஊர் இதை ஏற்றது. கீழே கிடந்த கற்களிலிருந்து இரண்டை அவசரமாக எடுத்து பைக்குள் போட்டார் செல்வந்தர். அதை கவனித்த இளம்பெண் திடுக்கிட்டாள். அவர் போட்டது இரண்டுமே கறுப்பு. எந்தக் கல்லை எடுத்தாலும் அந்தக் கிழவனை மணக்க வேண்டும்.

நொடிகளில் அவள் தீர்மானித்தாள். பைக்குள்ளிருந்து ஒரு கல்லை எடுத்தவள், தற்செயலாக நழுவ விடுவது போல அதைக் கீழே போட்டாள். ''தவறி விழுந்துவிட்டது. பையில் என்ன கல் இருக்கிறது என்று பார்த்தால், நான் எடுத்தது என்ன கலர் கல் என்பது தெரியும்'' என்றாள். செல்வந்தரின் தந்திரம் சுக்குநூறானது.

**எவ்வளவு சிக்கலான பிரச்னைக்கும் ஏதோ ஒரு தீர்வு இருக்கிறது.**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

● நிதர்ஸனா

பக்கத்து ஊர் சந்தையில் விற்பதற்காக குதிரையின் முதுகில் அரிசி மூட்டைகளை ஏற்றி எடுத்துப் போய்க் கொண்டிருந்தான் அந்த வியாபாரி. பயணக் களைப்பில் வழியில் அவன் கொஞ்ச நேரம் தூங்கி எழுந்து பார்த்தால் குதிரையைக் காணோம்.

கவலையில் ஆழ்ந்தபோது, எதிரேயிருந்த பாதையில் தூரத்தில் ஒரு பையன் வருவது தெரிந்தது. அவனிடம் வியாபாரி, ‘‘வழியில் ஏதாவது குதிரையைப் பார்த்தாயா?’’ என்று கேட்டான்.

அந்தப் பையன் நிதானமாக, ‘‘இடது கண் குருடாக இருக்கும்; வலது கால் கொஞ்சம் ஊனமாக இருக்கும்; முதுகில் நிறைய அரிசி மூட்டைகளை சுமந்து கொண்டிருக்கும்... அந்தக் குதிரைதானே..?’’ என்று கேட்டான். வியாபாரி உற்சாகமாகி, ‘‘ஆமாம்... நீ பார்த்த அதே குதிரைதான்... அது எங்கே



இருக்கு?’’ என்று பரபரத்தான்.

‘‘குதிரையை நான் பார்க்கவில்லை. ஆனால், அது இந்த வழியாகத்தான் போயிருக்கிறது!’’ என்றான் பையன்.

வியாபாரி டென்ஷன் ஆகிவிட்டான். பையன்தான் குதிரையைத் திருடியிருப்பான் என்ற சந்தேகம் அவனுக்கு எழவே, நீதிமன்றத்துக்கு அவனை இழுத்துச் சென்றான்.

‘‘நீ பார்க்காத குதிரையை எப்படி அவ்வளவு சரியாக வர்ணித்தாய்?’’ என நீதிபதி கேட்டார். ‘‘அது ரொம்ப சிம்பிள்! நடந்துபோகும் பாதைகளை ஆராய்வது என் வழக்கம். அப்படி பார்த்த குதிரையின் குளம்புத் தடங்களில் இடது கால் தடம் அழுத்தமாக ஊன்றி இருந்தது. அதற்கு வலது கால் ஊனம் என்பதை உணர்ந்தேன். பாதையின் வலதுபுறம் இருந்த புற்கள் மட்டும் மேயப்பட்டு இருந்தன. இடதுபுறமும் நல்ல புற்கள் இருந்தாலும், அவற்றை அது மேயவில்லை. அதனால் இடது கண் குருடு என்பது தெரிந்தது. பாதையில் சிதறியிருந்த விதம்விதமான அரிசி மணிகளை வைத்து, அது சுமந்துபோனது நிறைய அரிசி மூட்டைகள் என்பதை அறிந்துகொண்டேன்...’’ என்று அவன் சொன்னான்.

வியாபாரியைத் துரத்திய நீதிபதி, பையனைப் பாராட்டினார்.

**அவசரத்தில் யார் மீதும் பழி சுமத்தக்கூடாது!**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

விரும்பும் எதையும் நிமிடங்களில் அடையத் துடிக்கும் அடமான சிறுவன் அவன். அவனுடைய பணக்கார அப்பாவுக்கு, தனது செல்ல மகன் கஷ்டம் தெரியாமல் வளர்கிறானோ என்ற கவலை ஏற்பட்டது. 'கிராமத்தில் ஏதாவது ஒரு ஏழையின் வீட்டுக்குக் கூட்டிச்சென்று, அவர்களது ஒரு நாள் வாழ்க்கையைப் பார்க்கவைத்தால் இவனுக்கு உலகம் புரியும்' என்று நினைத்தார் அவர்.

மறுநாள் தந்தையும் மகனுமாகக் கிளம்பினார்கள். ஒரு பகலும் ஒரு இரவும் கழிந்தபிறகு இருவரும் வீடு திரும்பினர். வறுமையின் கொடுமையை நேரில் பார்த்த மகன், தனக்கு வசதியான வாழ்க்கை அமைந்ததற்காக கடவுளுக்கு நன்றி சொல்லி, பிடிவாதத்தைக் கைவிடுவான் என எதிர்பார்த்தார் தந்தை. பையனிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தார்.

''வறுமை எவ்வளவு கொடியது என்பதை உணர்ந்து கொண்டாயா?'' என்று மகனிடம் கேட்டார்.

''ஆமாம்... நாம் எவ்வளவு ஏழைகளாக இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டேன்'' என்று அதிரவைத்த மகன், தொடர்ந்தான்.

''அப்பா... நம் வீட்டில் ஒரு நாய் வளர்க்கவே சிரமப்படுகிறோம்; அவர்கள் வீட்டு வாசலில் எப்போதும் நான்கு நாய்கள் இருக்கின்றன. நம் வீட்டு நீச்சல் குளம் தோட்டத்தில் பாதியளவு தான் இருக்கிறது; அவர்கள் வீட்டு கொல்லைப்புறத்தில் இருக்கும் ஏரியின் எல்லை எதுவரை என்று தெரியவே இல்லை. நாம் தோட்டத்தில் வெளிச்சம் வேண்டி விளக்குகளை வைத்திருக்கிறோம்; அவர்களோ நட்சத்திரங்களையே வெளிச்சத்துக்கு பயன்படுத்துகிறார்கள். நம் வீடு ஒரு துண்டு நிலத்தில் இருக்கிறது; அவர்களது வீட்டு வாசலைத் தாண்டினால் கண்ணுக்கெட்டிய தூரம்வரை வயல்வெளிகளாக இருக்கின்றன.

நாம் வீட்டு வேலைக்கு ஆட்களை வைத்திருக்கிறோம்; அவர்களோ ஒருவருக்கு இன்னொருவர் உற்சாகமாக உதவிக் கொள்கிறார்கள். நாம் உணவுக்கு வேண்டியதை விலை கொடுத்து வாங்குகிறோம்; அவர்கள் விளைவித்து சாப்பிடுகிறார்கள். நாம் சுவர்களையும் பூட்டுகளையும் பாதுகாப்புக்கு நம்பியிருக்கிறோம்; அவர்களை நண்பர்களே பாதுகாக்கிறார்கள்...'' என்று சொல்லி, அப்பாவை பேச்சு மூச்சற்றவராக ஆக்கிய மகன் கடைசியாகக் கேட்டான்...

''ஏன் கடவுள் நம்மை இவ்வளவு ஏழையாகப் படைத்தார்?''



**கண்ணால் காண்பதும் மனசால் உணர்வதும் பல சமயங்களில் வேறுவேறாக இருக்கும்!**

**நிதர்ஸனா**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

**போ**ரில் ஏற்பட்ட காயத்தால் ஒரு கண்ணை இழந்தவன் அந்த மன்னன். முகத்தின் அந்தப் பக்கமும் அகோர மாகவே இருக்கும். இதனால் தன்னை மக்கள் கிண்டல் செய்கிறார்களா என்ற சந்தேகம் அவனுக்கு எழுந்தது. இதை விசாரிக்க முடிவு செய்தான்.

''மன்னா, தங்கள் முகத்தை ஓவியமாக வரைந்து முக்கிய இடங்களில் வைக்கலாம். அதைப் பார்த்து மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்துவிடலாம்!'' என்றார் ஓர் அமைச்சர்.

உடனடியாக ஓவியர் வரவழைக் கப்பட்டார். ''என்னை மோசமாக படம் வரைந்தால், உன் தலையை எடுத்து விடுவேன்'' என எச்சரித்தார் மன்னர்.



●நிர்மலா

அப்படியே தத்ரூபமாக மன்னரை வரைந்து முடித்தார் ஓவியர். படத்தைப் பார்த்ததும் மன்னரின் முகம் கோபத்தில் சிவந்தது. ''என்னை இவ்வளவு கோரமாக வரைந்திருக்கிறாயே... உனக்கு எவ்வளவு தைரியம்?'' எனக் கேட்டு, அவன் தலையைத் துண்டாக்கிவிட்டார் மன்னர்.

அடுத்த ஓவியர் வந்தார். மன்னரின் முகத்தில் இருந்த தழும்புகளை ஒதுக்கிவிட்டு, அவரது இல்லாத கண்ணையும் அழகாக்கி வரைந்தார் அவர். ''இந்த ஓவியத்துக்கும் என் முகத்துக்கும் சம்பந்தமே இல்லை. என்னை வெற்றுப் புகழ்ச்சிக்கு மயங்குபவன் என நினைத்தாயா?'' என்று கேட்டு அவனது தலையையும் துண்டாக்கினார் மன்னர்.

அதன்பின் யாருமே அவரை ஓவியம் வரைய முன்வரவில்லை. 'மன்னரை ஓவியமாக வரைந்து தந்தால் லட்சம் பொற்காசுகளும் ஒரு கிராமமும் பரிசு' என அறிவித்தபிறகு ஓர் இளைஞன் வந்தான். அவன் மன்னரின் நேரடித் தோற்றத்தை அப்படியே வரையாமல் பக்கவாட்டில் வரைந்தான். நன்றாக இருக்கும் கண்ணும், முகத்தோற்றமும் மட்டுமே படத்தில் இருக்கிறமாதிரி பார்த்துக்கொண்டான். மன்னரும் மகிழ்ந்து பரிசுகளை அள்ளிக் கொடுத்தார்.

**புத்திசாலிகளுக்கு பிரச்னைகளுக்கான தீர்வும் தெரியும்; அவற்றிலிருந்து தப்பிக்கும் வழியும் தெரியும்.**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books



# கடைசி பக்கம்

கம்ப்யூட்டர் இஞ்சினியரான அவர், ஓய்வெடுக்க வந்த இடத்தில் ஆற்றங்கரை ஓரமாக அமர்ந்து, தனக்கு வந்த மின்னஞ்சல்களை லேப்டாப்பில் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென ஏதோ பறவை எழுப்பிய சத்தத்தில் அவர் தடுமாற, லேப்டாப் ஆற்றில் விழுந்துவிட்டது.

அவருக்கு சின்ன வயசில் படித்த 'தங்க கோடாரி' கதை ஞாபகத்துக்கு வந்தது. உடனே கடவுளை வேண்ட ஆரம்பித்தார். கடவுளும் தோன்றினார். ''ஆற்றில் விழுந்துவிட்ட என் லேப்டாப் திரும்ப எனக்கு வேண்டும்'' என்றார் அவர். கடவுளும் ஆற்றில் மூழ்கி, தீப்பெட்டி சைஸில் ஒரு வஸ்துவைக் கொண்டுவந்து, ''இதுதானா?'' என்று கேட்டார்.

இஞ்சினியருக்கு இப்போது சந்தேகம் வந்துவிட்டது... 'கடவுள் இன்னமும் புராண காலத்திலேயே இருக்கிறார். அவருக்கு லேட்டஸ்ட் கண்டுபிடிப்புகள் பற்றித் தெரியவில்லை' என நினைத்த அவர், ''கடவுளே, லேப்டாப் என்பது ஒரு பெட்டி மாதிரி இருக்கும். திறந்து மூடலாம்'' என விளக்கமாகச் சொல்ல, கடவுள் திரும்பவும் மூழ்கி கால்குலேட்டர் சைஸில் எதையோ கொண்டுவந்தார்.

இஞ்சினியர் எரிச்சலாகி, ''நான் தொலைத்த பெட்டி பெரிதாக இருக்கும்!'' என்று கத்தினார். இம்முறை கடவுள் சரியாக இஞ்சினியர் தொலைத்த லேப்டாப்பைக் கொண்டு வந்தார். ''மூன்றையும் வைத்துக்கொள்!'' என்றார்.

இஞ்சினியர் மறுத்தார். ''எனக்கு புகைபிடிக்கும் பழக்கம் இல்லை. அதனால் தீப்பெட்டி வேண்டாம். கால்குலேட்டர் செய்யும் வேலையை லேப்டாப் அதிவேகமாக செய்யும். அப்புறம் அதுவேறு எதற்கு? விஞ்ஞான வளர்ச்சிகளை இன்னமும் அறிந்துகொள்ளாமல் இருக்கிறீர்களே!'' என கடவுளை நக்கல் செய்தார்.

கடவுளுக்கு கடும்கோபம் வந்துவிட்டது. ''முட்டாளே! நான் உன்னிடம் முதலில் கொடுத்தது எல்லாம் இன்னும் பல ஆயிரம் ஆண்டுகள் கழித்து வரப்போகிற அதிநவீன லேப்டாப் மாடல்கள். கடவுளைவிட அதிகம் தெரிந்தவன் என்ற மமதை உன் கண்களை மறைத்துவிட்டது. அதனால் அரிய வாய்ப்பை இழந்துவிட்டாய்'' என்று சொல்லி, அவனது லேப்டாப்பையும் சேர்த்து பிடுங்கிக்கொண்டு மறைந்தார்.

**அறியாமையை வெளிப்படுத்துகிறவர்கள்,**
**அரிய வாய்ப்புகளை இழக்கிறார்கள்!**

● நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

சுட்டித்தனமாக ஊர் சுற்றும் அந்த முயல் குட்டிக்கு, தன் இனத்தில் இருக்கும் எல்லோரையும் போல வளைக்குள் வாழ்க்கையைக் கழிப்பதில் இஷ்டமில்லை. தன் பொது அறிவை வளர்த்துக்கொள்ள விரும்பியது.

'நான் உலகத்தை சுற்றிப் பார்க்க விரும்புகிறேன்' என்று தாயிடம் அனுமதி கேட்டுக் கிளம்பியது. கொஞ்ச தூரத்தில் எதிர்ப்பட்ட ஒரு குரங்கிடம் கேட்டது... "குரங்கு அண்ணா, உலகம் எப்படி இருக்கும்?"

"அது உருண்டையா இருக்கும்னு ஊருக்குள்ள போகும்போது பள்ளிக்கூடத்து பசங்க பேசிக்கறதை கேட்டிருக்கேன்" என்றது குரங்கு.

"ஆனா, நாம எங்கே நின்னு பார்த்தாலும் தட்டையாதானே தெரியுது?" என்று சந்தேகம் கேட்டது முயல்.

"எனக்கு தெரிந்தது இவ்வளவுதான். நீ வேறு யாரிடமாவது கேள்!" என்று சொல்லிவிட்டு நகர்ந்தது குரங்கு. இன்னும் கொஞ்ச தூரம் போன முயல், எதிரில் ஒரு யானை வருவதைப் பார்த்து, அதனிடமும் இதே கேள்வியைக் கேட்டது. "உலகம் ரொம்ப இறுக்கமான, கடினமான ஒரு உருண்டையா இருக்கும்னு நான் கொஞ்ச நாள் கோயில்ல இருக்கும்போது கேள்விப்பட்டிருக்கேன்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தது யானை.

முயல் இப்படியே நடந்து காட்டின் விளிம்புக்கு வந்துவிட்டது. அங்கே ஒரு பூசணித் தோட்டத்தைப் பார்த்தது. அங்கிருந்த பெரிய பூசணிக்காய் ஒன்று அதன் கவனத்தை ஈர்த்தது. அது உருண்டையாக இருந்தது. அதன் மேல் ஏறி நின்று பார்த்தது. அது இறுக்கமாகவும் கடினமாகவும் இருந்தது. தோட்டம் முழுக்க இப்படி பல 'உலகங்களை' அது பார்த்தது. எல்லா உலகங்கள் மீதும் அது ஏறிப்பார்த்து, சுற்றிவர ஆரம்பித்தது. தோட்டக்காரன் முயலைப் பார்த்ததும் தடியெடுத்துக் கொண்டு விரட்டி வந்தான்.

தன் வளைக்கு திரும்பிவந்த முயல் இப்படிச் சொன்னது; "நிறைய உலகம் இருக்கு. அது எல்லாமே உருண்டையாவும் இருக்கு... எல்லா உலகத்தையும் ஒருத்தர்தான் காவல் காக்கிறார். அநேகமா அவர்தான் கடவுளா இருப்பார்னு நினைக்கறேன்!"



**அரைகுறை அறிவோடு தேடலில் இறங்குகிறவர்கள் இலக்கை அடைவதில்லை.**

● நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

நிதர்ஸனா



கோயில் மணியைத் திருடிய ஒருவன், ஊர் மக்கள் துரத்தியதால் காட்டுக்கு ஓடினான். அவனது ஓட்டத்தால் மணிச்சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. காட்டு ராஜாவான சிங்கம், இந்த மணிச் சத்தத்தால் எரிச்சலாகி, சத்தம் வந்த திசையை நோக்கி வந்து திருடனைக் கொன்றுவிட்டது.

அங்கேயே கிடந்த மணியை ஒரு குரங்குக்கூட்டம் பார்த்தது. அதை ஆட்டும்போது எழும் சத்தம், அவற்றுக்கு வேடிக்கையான பொழுதுபோக்கைத் தந்தது. ராத்திரி ஆனதும் அந்த மணியை எல்லா குரங்குகளும் மாறி மாறி அடித்து சத்தம் வரவழைத்தன.

நிசப்தமான இரவில் இந்த மணிச்சத்தம் ஊருக்குள் நன்றாகவே கேட்டது. மறுநாள் காட்டுக்குள் வந்துபார்த்த ஊர்க்காரர்கள் சிலர், திருடன் செத்துக்கிடந்ததைப் பார்த்தனர். காட்டுக்குள் இருக்கும் ஏதோ ஒரு பேய்தான் திருடனைக் கொன்றுவிட்டு, இரவு நேரத்தில் மணியை ஆட்டி மிரட்டுவதாக அவர்கள் நினைத்தனர்.

இந்த பேய்க் கதை காற்றைவிட வேகமாக ஊரில் பரவியது. அடுத்தடுத்த இரவுகளிலும் மணிச்சத்தம் நீண்ட நேரம் கேட்க, பீதியில் பலர் ஊரை காலி செய்து கிளம்பினர். பக்கத்து கிராமங்களுக்கும் தகவல் பரவ, எங்கும் குழப்பம். மன்னன் கவலையில் ஆழ்ந்தான்.

அந்த கிராமத்தில் இருந்த புத்திசாலி இளைஞன் ஒருவன், துணிச்சலாக இரவில் காட்டுக்குள் வந்து குரங்குகளின் சேட்டையைப் பார்த்தான். அவனுக்கு எல்லாம் புரிந்தது. மன்னனிடம் போன அவன், ''எனக்கு பரிசும் வேலையும் தருவதாக வாக்களித்தால் நான் அந்தப் பேயைக் கொல்கிறேன்'' என்றான். மன்னனும் சம்மதித்தான்.

அன்று இரவே ஏகப்பட்ட தின்பண்டங்களை எடுத்துக்கொண்டு, காட்டுக்குள் போன அவன், அவற்றைத் தரையில் பரப்பிவிட்டு ஒளிந்துகொண்டான். குரங்குகள், தின்பண்டங்களைப் பார்த்ததும் மணியைப் போட்டுவிட்டு அவற்றைச் சாப்பிட ஓடின.

அதை எடுத்துவந்த இளைஞன், ''பேயைக் கொன்று அதன் கையிலிருந்த மணியை எடுத்து வந்துவிட்டேன்'' என்றான். அந்த 'சாதனை'யால், அவன் நாட்டுக்கே தளபதி ஆனான்.

**எந்த சிக்கலிலும் தங்களுக்கு ஒரு வாய்ப்பு இருப்பதை புத்திசாலிகள் மட்டுமே அறிவார்கள்.**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books



அந்த நாட்டின் மன்னர் திடீரென இறந்து போனார். அவருக்கு வாரிசுகள் இல்லை. அடுத்து ஆளப்போவது யார் என்ற கேள்வி எழுந்தது.

இறந்த மன்னருக்கு ஒரு அண்ணன் இருந்தார். திறமையில்லாத அவரை ஒதுக்கி விட்டு, தம்பி மன்னர் ஆகிய கோபத்தில், எப்போதோ எங்கோ ஓடிப்போனவர் அவர். இப்போது வந்த அவர், உரிமை கோரினார். ''நீங்கள்தான் இதற்குத் தகுதியில்லை என நிராகரிக்கப்பட்டவர் ஆயிற்றே?'' என அமைச்சர்கள் தயங்கினர். ''எந்த வேலையையும் யாரும் கற்றுக்கொள்ள முடியும்'' என சவால் விட்ட அவர், மன்னர் ஆனார்.

முதல்வேலையாக, ''எல்லோரும் எல்லா வேலைகளையும் செய்ய கற்றுக்கொள்ள வேண்டும்'' என்று சொல்லி, சிப்பாய்களை விவசாயிகள் ஆக்கினார். விவசாயிகளை வியாபாரம் செய்ய வைத்தார். இப்படி எல்லாமே குழப்பமானது.

மறுநாள்... மன்னர் குளித்துவிட்டு உடைகளைத் தேடினால் எல்லாமே அழுக்காக இருந்தன. ''உங்கள் கட்டளைப்படி சமையல்காரன் துணி துவைத்தான்... அதனால்தான் இப்படி!'' என்றனர் அமைச்சர்கள்.

மன்னர் எரிச்சலோடு உடைகளை அணிந்துகொண்டு சாப்பிடப் போனார். அவ்வளவு மோசமான உணவை அவர் வாழ்நாளில் சாப்பிட்டதில்லை. அவரது உத்தரவின்படி சமையல்காரர்கள் போர்ப் பயிற்சிக்கு போய்விட, சில சிப்பாய்கள் சமைத்திருந்தார்கள். அரைகுறையாக சாப்பிட்டுவிட்டு தேரில் ஏறி நகர்வலம் கிளம்பினார். தேரோட்டிகளும் புதியவர்கள். அவர்கள் செலுத்திய விதத்தில் குதிரை மிரள, மன்னர் நிலைதடுமாறி கீழே விழுந்தார். காலில் மோசமாக அடிபட்டு ரத்தம் கொட்டியது. வைத்தியர் வந்தார். அவரும் தொழிலுக்கு புதியவர். கால்களை அழுத்தி அவர் ஏதோ பச்சிலைகளைப் போட, கால்கள் வீங்கி, வலி இன்னும் மோசமானது.

''பக்கத்து நாட்டு வைத்தியரிடமாவது அழைத்துப் போங்கள்'' என்று மன்னர் பரிதாபமாகக் கதற, ஒரு பல்லக்கு வந்தது. மன்னர் ஏறியதும் பல்லக்குத் தூக்கிகள் நகராமல், நின்ற இடத்திலேயே நடனமாடினார்கள். அவர்கள் ஏற்கனவே அரண்மனையில் நாட்டியம் ஆடியவர்கள்.

பல்லக்கிலிருந்து எகிறி கீழே குதித்த மன்னர், ''அவரவர் வேலையை அவரவர் செய்யுங்கள்; திறமையான ஒரு மன்னரை நீங்களே தேர்வு செய்து கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டு, கால்களை விந்தியபடி பழைய இடத்துக்கே கிளம்பினார்.

**தெரியாத வேலையில் திறமை காட்ட முயற்சித்தால் தலைக்குனிவே மிஞ்சும்!**

## கடைசி பக்கம்

● நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books



கடினா உழைப்பாளியாக இருந்தாலும், அவனுக்கு போதுமான புத்திசாலித்தனம் கிடையாது. அதனால் எங்கு வேலைக்குப் போனாலும் சரியான கூலி தராமல் அவனை ஏமாற்றிவிடுவார்கள். அவனது மனைவி இதனால் அவனைத் திட்டியபடி இருப்பாள்.

அவனுக்கோ எரிச்சலாக இருக்கும். நாள்முழுக்க மாடாக உழைத்துவிட்டு, வீட்டுக்கு வந்ததும் இவளிடம் வசவு வாங்குகிறோமே என வருந்துவான். நாளடைவில் இது பழகிவிட்டது.

ஒரு நாள் அவன் மனைவி, 'ஊருக்கெல்லாம் உழைத்துவிட்டு குறைந்த கூலி வாங்குவதை விட வீட்டுக்குப் பின்னால் ஒரு காய்கறித் தோட்டம் போட்டுப் பிழைக்கலாம்' என சொன்னாள். இதற்காக தோட்டத்தை சுத்தம் செய்யுமாறு கணவனுக்கு கட்டளையிட்டாள். அவன் வெயிலில் வேலை பார்க்க, அவள் வீட்டுக்குள் இருந்துகொண்டு உத்தரவுகள் பிறப்பித்தபடி இருந்தாள்.

திடீரென அவனது கடப்பாரை ஏதோ உலோகத்தின் மீது மோதிய சத்தம் கேட்டது. குனிந்து பார்த்தால், அது ஒரு காலி பாத்திரம். குனிந்தபோது அவன் பாக்கெட்டில் இருந்த நாணயங்கள் அதற்குள் விழுந்தன.

அவற்றை எடுக்கப் போனவன் திகைத்தான். காரணம், விழுந்த இரண்டு நாணயங்கள் இப்போது நான்காகி இருந்தன. மனைவியை அழைத்து விஷயத்தைச் சொன்னான்.

தன்னுள் விழும் எதையும் இரட்டிப்பாக்கும் மாயப் பாத்திரம் அது என்பது அவளுக்கும் புரிந்தது. தன் நகைகளைக் கழற்றி, பலமுறை அதற்குள் போட்டுப் போட்டு எடுத்தாள். உள்ளே நகைக் குவியலே உருவாகி இருக்க, அதை அள்ளப் போனவள் தவறி பாத்திரத்திற்குள் விழுந்துவிட்டாள். அடுத்த நொடியில் அவளைப் போலவே இன்னொரு உருவம் தோன்றியது.

கணவன் திகைத்துவிட்டான். ஒரு மனைவியிடமே திட்டு வாங்கி மாளாது. இப்போது இரண்டு பேரா..? ரொம்ப யோசிக்காமல் அவனும் உடனே பாத்திரத்தில் குதித்து, தன்னிடமிருந்து உருவான இன்னொரு ஆசாமியோடு மனைவியின் பிம்பத்தை அனுப்பிவிட்டு நிம்மதி அடைந்தான்.

**நெருக்கடியில் சராசரி மனிதர்களுக்குக்கூட அபாரமான யோசனைகள் தோன்றும்!**

# கடைசி பக்கம்

■ நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

■ நிதர்ஸனா

கிராமத்தின் நுழைவாயிலில் ஒரு தோரணவாயில் கட்ட வேண்டும் என்ற ஆசை அந்த கிராமத் தலைவனுக்கு வந்தது. தன் பெயரில் அதைக் கட்ட விரும்பிய அவன், கிராமத்தில் இருக்கும் அனைவரும் இதற்காக வந்து இலவசமாக வேலை செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டான். முரட்டு சர்வாதிகாரியான அவனைப் பகைத்துக்கொள்ள முடியாது என்பதால் அனைவரும் தங்கள் பிழைப்பை விட்டுவிட்டு வந்து இந்த வேலையைப் பார்த்தனர்.

கட்டுமானப் பணியை மேற்பார்வையிட வந்த தலைவன், அங்கு ஒரு இளைஞன் சும்மா உட்கார்ந்தபடி வேலை செய்பவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததை கவனித்தான். கோபத்தில் அவன் முகம் சிவந்தது. இளைஞனை நெருங்கிய அவன், ''ஏன் இப்படி வெட்டியாக உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று கேட்டான்.



பணிவோடு எழுந்த இளைஞன், ''இந்த புண்ணிய வேலையில் என்னை ஈடுபடுத்திக் கொள்ள ஆசைதான். ஆனால், என் வயிறு காலியாக இருக்கிறது. பசியோடு இருக்கும்போது எப்படி வேலை பார்க்க முடியும்?'' என்று கேட்டான்.

தலைவன் அந்த இளைஞனை நன்கு நோட்டமிட்டான். வாட்டசாட்டமான அவன் ஒருவனே ஐந்து ஆட்கள் செய்யக்கூடிய வேலைகளை தனியாக செய்வான் என்று தோன்றியது. அவனுக்கு உணவளிக்க உத்தரவிட்டான்.

அவனுக்கு உணவு பரிமாறி தலைவனின் ஆட்கள் களைத்துவிட்டனர். அவ்வளவு நிறைய சாப்பிட்ட அவன், வயிறு நிறைந்த உணர்வோடு ஒரு ஏப்பம் விட்டுவிட்டு, அதே இடத்தில் போய் திரும்பவும் உட்கார்ந்து கொண்டான். இதை கவனித்த தலைவன் டென்ஷனாகி விட்டான். ''அதான் சாப்பிட்டுவிட்டாயே... இப்போது ஏன் வேலை செய்யாமல் உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று கேட்டான்.

''என் வயிறுதான் நிறைந்துவிட்டதே... இப்போது நான் எதற்காக வேலை செய்ய வேண்டும்?'' என்று நிதானமாகக் கேட்டான் அந்த இளைஞன்.

**எதையுமே இலவசமாக எதிர்பார்க்கக் கூடாது!**


Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

குருகுலத்தில் தன்னிடம் பயிலும் மாணவர்களில் ஒரு குறிப்பிட்ட சிறுவன் மீது குருவுக்கு கடும் கோபம். ஒழுங்காக வகுப்புகளுக்கு வருவதில்லை; சரியாக படிப்பதும் இல்லை; கட்டணமும் முறையாக செலுத்துவதில்லை. 'இவனை நிறுத்திவிடுவதுதான் நல்லது' என நினைத்தார் குரு. தன்னை சந்திக்க வருமாறு அவனுக்கு தகவல் அனுப்பினார்.

சரியாக அவர் சாப்பிடும்வேளையில் வந்தான் பையன். டேபிளில் சாப்பாடு இருக்க, பசியோடு சாப்பிட அமர்ந்தவருக்கு வந்தது கோபம். ''இதுதான் வரும் நேரமா?'' என்று கர்ஜித்தார்.

அவன் அமைதியாக பதில் சொன்னான்... ''மன்னிக்க வேண்டும் குருவே, திடீரென எனக்கு பெரும் புதையல் கிடைத்துவிட்டது. ஒரு பானை நிறைய தங்கக்காசுகள். அவற்றை எடுத்து எண்ணி வைப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. உங்களுக்குக் கூட அதில் ஒரு பங்கு தரலாம் என நினைத்தேன்...''

குருவுக்கு தன் இளம் சீடன் மீது திடீர் பாசம் பொத்துக்கொண்டது. ''வா, நீயும் என்னோடு சாப்பிடு!'' என்று உட்காரவைத்துப் பரிமாறினார். அவன் தனக்கு எவ்வளவு பொற்காசுகள் தருவான்... அதை வைத்து என்னவெல்லாம் செய்யலாம் என்ற நினைப்பு அவரை சாப்பிட விடாமல் செய்தது.

''சரி... புதையலை பத்திரமாக வைத்திருக்கிறாய்தானே!'' என்று கேட்டு அவனை ஆழம்பார்த்தார் குரு. அதற்குள் சாப்பிட்டு முடித்திருந்த அவன், ''எங்கே குருவே... அதற்குள்தான் அம்மா எழுப்பிவிட்டார்களே!'' என்றான். குரு புரியாமல் குழம்பினார்.

''ஆமாம்... நான் புதையலை எடுத்ததாக கனவு கண்டேன். அம்மா எழுப்பியதும் எல்லாம் கலைந்துவிட்டது. ஆனால், என்றாவது ஒருநாள் எனக்கு புதையல் கிடைக்கும். அப்போது நிச்சயம் உங்களுக்கும் பங்கு உண்டு!'' என்றான் அவன். ஆத்திரமாக இருந்தாலும் அவனை புன்சிரிப்போடு வழியனுப்பி வைத்தார் குரு. அவன் கிளம்பிப்போய் ரொம்ப நேரம் கழித்தபிறகுதான், அவனை எதற்காக வரச் சொன்னோம் என்ற விஷயமே குருவின் ஞாபகத்துக்கு உறைத்தது.



**சபலப் பேர்வழிகள் எளிதில் ஏமாற்றத்துக்கு ஆளாவார்கள்.**

**நிதர்ஸனா**



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

எப்போதுமே சும்மா இருப்பது அந்த முதியவருக்குப் பிடிக்காது. அன்று அப்படித்தான்... காட்டுவழியாக குடும்பத்துடன் பயணித்தவர், வழியில் ஒரு மரத்தடியில் தங்க நேர்ந்தது. எல்லோருக்கும் அவர் கட்டளைகள் பிறப்பிக்க, மகன்கள் காட்டில் பழங்களை சேகரிக்கப் போனார்கள். மருமகள்கள் சமையலை ஆரம்பித்தனர். பேரப் பிள்ளைகள் கால்நடைகளை கவனித்தனர். கிழவர் அமைதியாக உட்கார்ந்து பெரிதாக கயிறு திரிக்க ஆரம்பித்தார். அறுவடை காலத்தில், மாடுகளைப் பிணைத்து, பிணையடிக்க உதவும் அந்தக் கயிறு.

அவர்கள் தங்கியிருந்த மரத்தின் மேல் ஒரு பூதம் வசித்துவந்தது. அது, இவர்கள் செய்யும் அத்தனை விஷயங்களையும் வேடிக்கை பார்த்தபடி இருந்தது. மற்ற எல்லாம் அதற்குப் புரிந்தது. ஆனால், கிழவர் எதற்கு கயிறு திரிக்கிறார் என்பது மட்டும் புரியவில்லை. இறங்கிவந்து கிழவரிடமே கேட்டது.



பூதத்தைப் பார்த்ததும் அவருக்கு உள்ளூர நடுக்கம். ஆனால் அதை வெளியில் காட்டாமல், ''உன்னைக் கட்டி இழுத்துப் போகத்தான் இந்த மந்திரக் கயிறு. என் வீட்டில் வந்து அடிமைமாதிரி நீ வேலைகள் செய்யப் போகிறாய்!'' என்றார்.

பூதம் நடுங்கிவிட்டது. ''என்னை ஒன்றும் செய்யாதீர்கள். உங்களுக்கு பெரிய பொக்கிஷமே தருகிறேன்'' என்ற பூதம், எப்போதோ அந்த மரத்தில் திருடர்கள் மறைத்துவைத்திருந்த புதையலை எடுத்துத் தந்தது. அவர்கள் சந்தோஷமாக வீடு திரும்பினர்.

பக்கத்து வீட்டுக் கிழவருக்கு இந்த விஷயம் தெரிந்தது. அவரும் அதேபோல கிளம்பிவந்தார். மரத்தடியை அடைந்ததும் எல்லோருக்கும் கட்டளைகள் பிறப்பித்தார். ஆனால் யாரும் அவர் சொன்னதைக் காதில் வாங்கவில்லை. ''பெரிசு, கம்னு கிட'' என்று திட்டிவிட்டு ஜாலியாக காட்டில் சுற்ற ஆரம்பித்தனர். கிழவர் தனியாக உட்கார்ந்து கயிறு திரிக்கத் தொடங்கினார்.

பூதம் இறங்கிவந்ததும், அதேபோல மிரட்டிப் பார்த்தார். பூதம் அமைதியாகச் சிரித்துவிட்டு, ''உன் குடும்பத்தினரே உனக்கு பயப்படவில்லை. நான் உனக்கு பயப்படுவேன் என எப்படி எதிர்பார்க்கிறாய்'' என்று கேட்டு, அவரை அடித்துத் துரத்தியது.

**சொந்தங்களால் மதிக்கப்படாதவர்களுக்கு வெளியில் மதிப்பு இருக்காது!**

நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

நகரின் பிரபலமான வியாபாரி அவன். ஒரு நாள் அவன் சோகமே உருவாக அரண்மனைத் தோட்டத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டான் ஒரு புத்திசாலி இளைஞன். வியாபாரியை நெருங்கி என்ன விஷயம் என்று விசாரித்தான்.

"எனக்கு ஒரு சிக்கலான பிரச்னை. இரவு கட்டிலில் படுத்துத் தூங்கும்போது, கட்டிலுக்கு அடியில் ஒரு பூதம் வந்து பதுங்கி, என்னைக் கொல்ல முயற்சிப்பதுபோல கனவு வருகிறது. பயத்தோடு விழித்து, கட்டிலுக்கு அடியில் தேடிப் பார்த்தால் எந்த பூதமும் இருப்பதில்லை. ஆனால், அதற்குப் பிறகு எனக்கு தூக்கம் வருவதில்லை. விடிய விடிய விழித்துக் கொண்டிருப்பேன். தினமும் இப்படியே நடக்கிறது. சரியான தூக்கம் இல்லாமல் உடம்பு மோசமாகிவிட்டது" என்றான் அந்த வியாபாரி சோகமாக.

"சரி, இப்போது இங்கு எதற்கு வந்தீர்கள்?"

"அரண்மனை வைத்தியரிடம் ஆலோசனை கேட்க வந்தேன். ஆயிரம் பொற்காசுகள் கொடுத்தால் இந்த பிரச்னையைத் தீர்ப்பதாக அவர் சொல்கிறார்... அவ்வளவு கொடுக்கவேண்டுமா என யோசித்துக் கொண்டிருக்கிறேன்!"

இந்த விஷயத்தில் தனக்கு சம்பாதிக்கும் வாய்ப்பு பிரகாசமாக இருப்பதை இளைஞன் உணர்ந்தான். "சரி, எனக்கு வெறும் நூறு பொற்காசுகள் கொடுங்கள்... நான் உங்கள் பிரச்னையை தீர்த்துவைக்கிறேன்" என்றான்.

"அப்படியா... நீங்களும் பெரிய வைத்தியரா?" என்று கேட்டபடியே, உற்சாகமாக அந்த இளைஞன் கேட்டதைக் கொடுத்துவிட்டு, "என்ன தீர்வு சொல்லப்போகிறீர்கள்?" என்று கேட்டான் வியாபாரி.

"ரொம்ப சின்ன விஷயம்தான். கட்டிலின் நான்கு கால்களையும் வெட்டிவிடுங்கள்... அப்புறம் பூதம் எப்படி கட்டிலுக்கு அடியில் பதுங்கமுடியும்!" என்று சொன்னான் இளைஞன்.

அற்ப விஷயங்களுக்கு அடுத்தவர்களிடம் ஆலோசனை கேட்டால், நஷ்டப்பட வேண்டியிருக்கும்.●



நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

# கடைசி பக்கம்

நெடுஞ்சாலையில் போய்க் கொண்டிருந்த பிச்சைக்காரன், எதிரில் மன்னரின் தேர் வருவதைப் பார்த்தான். 'விலையுயர்ந்த ஆபரணங்கள் அணிந்து பவனி வரும் மன்னரை வணங்கினால் பொன்னும் பொருளும் அள்ளித் தருவார்' என்று நினைத்த அவன், தரையில் விழுந்து வணங்கினான்.

''என்ன வேண்டும்?'' என்று மன்னர் கேட்டார். ''தினம் ஒரு வேளைகூட சாப்பிட முடியாத வறுமை. துரதிர்ஷ்டம் என்னை துரத்திக் கொண்டே இருக்கிறது'' என்று கண்ணீரோடு சொன்னான் அவன்.

மன்னரின் முகம் மாறியது. ''இந்த தேசத்தின் மகாராஜாவிடம் சொல்ல, உன்னிடம் நல்ல விஷயங்களே இல்லையா?'' என்று கேட்டவர், ''எனக்கு பிச்சை போடு!'' என்றபடி பிச்சைக்காரனிடம் கைகளை நீட்டினார்.

அதிர்ந்த பிச்சைக்காரன், தன் திருவோட்டிலிருந்து நான்கு அரிசி மணிகளை எடுத்து மன்னர் கையில் போட்டான். தேர் கிளம்பியது. 'மன்னன் நம்மை விட பெரும் பிச்சைக்காரனாக இருக்கிறானே...' என்று நினைத்தவன், வாய்க்கு வந்தபடி திட்டினான்.

அன்று மாலை அவன் வீடு திரும்பியபோது வாசலில் ஒரு மூட்டை இருந்தது. பிரித்துப் பார்த்தான். நிறைய அரிசியும், ஒரு தங்கக்கட்டியும் தென்பட்டது. உள்ளே நிறைய தங்கம் இருக்கும் என்ற ஆவலில் மூட்டையைக் கொட்டினான். மொத்தம் நான்கு தங்கக்கட்டிகள் இருந்தன. மன்னரிடம் கொடுத்த அரிசிமணிகளுக்கு ஈடாக வந்தவை அவை என்பது புரிந்தது. திருவோட்டில் இருந்த எல்லா அரிசியையும் கொடுத்திருந்தால் இன்னும் நிறைய கிடைத்திருக்குமே என ஆதங்கப்பட்டான் அவன்.

**நாம் எதைக் கொடுக்கிறோமோ அதையே பெறுகிறோம்!**



● நிதர்ஸனா



Click & Join -> https://t.me/tamilbooksworld